திவ்யார்த்த தீபிகை

7.12.1938

13 ———— 3

Divyartha Deepikai

JL
ഖ22m211,N26
N38·13·3
159935

* * * [அறிவினால் குறைவில்லா] தன்னைப் பெறுதற்கு உபாயமானவற்றை யெல்லாம் தானே அருளிச்செய்து, ஹிதோபதேசத்திற்குப் பாங்கல்லாதவர்களைத் தன் அழகாலே வசப்படுத்திக் கொள்பவனான பெருமான் விரும்பாத லாவண்யம் எனக்கு எதற்காக? என்கிறாள்.

"அறிவினால் குறைவில்லா அகல்ஞாலத்தவர்" என்பதற்கு 'அறிவினால் பரிபூர்ணர்களான இவ்வுலகத்தவர்கள்' என்று பொருளன்று. 'நமக்கு அறிவு இல்லையே!' என்று குறைபட அறியாதவர்கள் என்றபடி. 'நமக்குச் சோறில்லையே, தண்ணீரில்லையே, துணிமணியில்லையே!' என்று குறைபடுவர்கள்; அறிவு இல்லையே' என்றுமாத்திரம் குறைவுபடுவதில்லை ஸம்ஸாரிகள். இங்கே நம்பிள்ளை யீடு;—"நாட்டார் அந்ந பாநாதிகளெல்லாவற்றாலும் கார்யமுடையராயிருப்பார்களிறே; அறிவொன்றிலுமாயிற்று குறைவுபடவறியாதது. அறிவால் கார்யமின்றிக்கேயிருப்பாராயிற்று."

பகவத்கீதை அர்ஜுநனை நோக்கி அவதரித்ததாயினும், அவனை ஒரு வியாஜமாக நிறுத்தி அஸ்மதாதிகளுக்குமாக அது அருளிச்செய்யப்பட்டதாகையாலே "அகல் ஞாலத்தவரறிய நெறியெல்லாமெடுத்துரைத்த" என்றார். கர்மஜ்ஞான பக்திப்ரபத்திகளும், அவதாரரஹஸ்யஜ்ஞானம், புருஷோத்தமவித்யை முதலானவைகளுமான உபாயங்களெல்லாவற்றையும் திருவுள்ளம்பற்றி "நெறியெல்லாம்" என்கிறார்.

[குறியமாணுருவாகி இத்யாதி.] உபதேசத்தாலே திருந்தாதாரை வடிவழகாலே திருத்துவதொருமுறை உண்டாதலால் அது இங்கு விவக்ஷிதம். கொடுங்கோள்= கோள் என்று ப்ரதிக்ரஹத்தைச் சொல்லுகிறது; முதனிலைதிரிந்த தொழிற்பெயர். கொடிய கோளாவது கடினமான ப்ரதிக்ரஹம். சிறுகாலைக் காட்டிப் பெரியகாலாலே கொண்ட வஞ்சனையைச் சொன்னபடி.

கொடுங்கோளால் நிலங்கொண்ட என்ற இவ்விடத்து "[illegible] கஸ்த்வம் ப்ரஹ்மந்! அபூர்வ: க்வ ச தவ வஸதி: யாகிலா ப்ரஹ்மஸ்ருஷ்டி: கஸ் தே த்ராதாஸ்தி அநாத: க்வ ச தவ ஜநக: நைவ தாதம் ஸ்மராமி, கிம் தே அபீஷ்டம் ததாநி, த்ரிபதபரிமிதா பூமி: அத்யல்பமேதத், த்ரைலோக்யம் பாவகர்ப்பம் பலிமிதி நிகதந் வாமநோ வஸ் ஸ பாயாத்." என்கிற ச்லோகம் அநுஸந்திக்கத் தகும். இது மாவலிக்கும் வாமநமூர்த்திக்கும் ஸம்பாஷணையான ச்லோகம். இதன மிகவினிய பொருளைக் கேண்மின்—;

மாவலி:—[ஹே ப்ரஹ்மந்! த்வம் க:?] ப்ராஹ்மணகுமாரனே! நீ யாவன்? என்று கேட்க;

வாமனன்:—[அபூர்வ:] என்கிறான். இதற்கு இரண்டு பொருள்; இதுவரையில் ஒருநாளும் நான் இரப்பாளனாக வந்தவனல்லேன் என்பது ஒரு பொருள்; "நவிஷ்ஹ்யதே வஷ்வஷ்ட: யஷ்ஸாஸ ஸ:- ஸவஷ்வஷ்:" என்கிற வ்யுத்பத்தியினால் 'எல்லார்க்கும் முற்பட்டவன் நான்' என்பது மற்றொரு பொருள்.

மாவலி:—[தவ வஸதி: க்வ] உனது இருப்பிடம் யாது? என்றுகேட்க,

வாமனன்:— [யா அகிலா ப்ரஹ்மஸ்ருஷ்டி:—ஸா மம வஸதி:] என்கிறான். யாசகனாகையாலே பிரமன் படைத்த உலகமெங்கும் திரிபவன் நான் என்பது ஒருபொருள். * கருதரியவுயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறையுமொரு தனிநாயகனாயிருப்பவன் யான் என்பது மற்றொரு பொருள்.

மாவலி:—[தே த்ராதா க:?] நீ யாருடைய ஸம்ரக்ஷணையில் இருந்து வருகிறாய்? என்று கேட்க,

வாமனன்:—[அநாத:] என்கிறான். எனக்கு யாரும் நாதனில்லை என்கை. புகலற்றுத் திரிகிறேனென்பதும், உலகுக்கெல்லாம் நானே நாதனாதலால் எனக்கு யாரும் நாதரில்லை என்பதும் கருத்து.

மாவலி.—[தவ ஜநக: க்வ] உன்னுடைய தகப்பனார் எங்கே? என்று கேட்க;

வாமனன்:—[தாதம் நைவ ஸ்மராமி] என்கிறான். தகப்பனார் எனக்கு ஞாபகத்திற்கு வரவில்லை யென்கிறவிது மிகவும் சாதுரியமான பேச்சு. மிக்க இளம்பிராயத்திலேயே தகப்பனாரையிழந்துவிட்டேனென்பதும், உலகுக்கெல்லாம் நானே பிதாவாகையால் எனக்கொரு பிதா இருக்க நியாயமில்லையென்பதும் கருத்து.

மாவலி:—[தே கிம் அபீஷ்டம் ததாநி?] உனக்கு நான் கொடுக்கவேண்டியதாக நீ விரும்பும் பொருள் என்? என்று கேட்க;

வாமனன்:—[த்ரிபதபரிமிதா பூமி:] என்றான்; * என்னுடைய பாதத்தால் யானளப்பமூவடிமண் வேண்டுமெத்தனை யென்கை.

இப்படிப்பட்ட வாக்சாதுர்யத்தை நினைத்துக் கோடுங்கோளால் நிலங்கொண்ட என்றதாகவுமாம்.

கிறி—உபாயம்; அவன் தரும் விரகு அறிந்து வாங்கவல்ல பெருவிரகன் என்கை. இப்படிப்பட்ட பெருமான் விரும்பாத லாவண்யத்தில் எனக்கு அபேக்ஷையில்லை யென்றாளாயிற்று. .... (கூ)

கிளரொளியால்குறைவில்லா அரியுருவாய்க்கிளர்ந்தெழுந்து *
கிளரொளியஇரணியனது அகல்மார்பம்கிழித்துகந்த *
வளரொளியகனலாழி வலம்புரியன், மணிநீல *
வளரொளியான்கவராத வரிவளையால்குறைவிலமே.

159935
O22zm21 N26
N38.13-3

கிளர் ஒளியால் குறைவு இல்லா	கிளர்கின்ற தேஜஸ்ஸு நிரம்பப்பெற்ற	கனல்	நெருப்புப் போலேயிருக்கிற
அரி உரு ஆய்	நரசிங்கமூர்த்தியாய்	ஆழி	சக்கரத்தையும்
கிளர்ந்து எழுந்து	சீறிக்கொண்டு தோன்றி,	வலம்புரியன்	சங்கையுமுடையவனும்,
கிளர் ஒளிய இரணியனது	மிக்கதேசு பொருந்திய இரணியனுடைய	நீலம் மணி வளர் ஒளியான்	நீலரத்னம் போன்று விளங்குகின்ற திருமேனி விளக்கத்தையுடையனுமான பெருமான்
அகல் மார்பம்	விசாலமான மார்பை	கவராத	விரும்பாத
கிழித்து	இருபிளவாக்கித் திருவுள்ள முகந்தவனும்,	வரி வளையால் குறைவு இலம்	அழகிய வளையில் அபேக்ஷையுடையோமல்லோம்.
வளர் ஒளிய	வளர்கின்ற ஜ்வாலையையுடைய		

* * * [கிளரொளியால்.] ஆச்ரிதவிரோதியான இரணியனைப் பிளந்தொழிந்த நரஸிம்ஹன் விரும்பாத வளை எனக்கு வேண்டாவென்கிறாள்.—கிளர்ந்த வொளி குறைவின்றிக்கேயிருக்கிற நரஸிம்ஹமூர்த்தியாய்ச் சீறிக்கொண்டு தோற்றி இரணியனுடைய அகன்ற மார்வைக்கிழித்து 'சிறுக்கனுடைய விரோதி தொலையப் பெற்றோம்' என்று திருவுள்ளமுவந்தவன்.

வளரொளிய கனலாழி வலம்புரியன்— இரணியனது உடல் நரஸிம்ஹனுடைய திருநகங்களுக்கே இரைபோரப் பெறுமையாலே திவ்யாயுதங்களுக்கு இங்குக் காரியமேயில்லையாயிற்று; 'இங்கு நமக்கு ஒன்றும் இரை கிடைக்கவில்லையே!' என்கிற சீற்றத்தினால் சங்கும் சக்கரமும் கதகதென்று வயிறெரிகிறபடி.

அப்படிப்பட்ட எம்பெருமான் விரும்பாத—(அதாவது) அவன் வாங்கித் தன் கையில் இட்டுக்கொள்ளாத வளை எனக்கு வேண்டா என்றாளாயிற்று. (எ)

வரிவளையால்குறைவில்லாப் பெருமுழக்காலடங்காரை *
எரியழலம்புகவூதி இருநிலமுன்துயர்தவிர்த்த *
தெரிவரியசிவன்பிரமன் அமரர்கோன்பணிந்தேத்தும் *
விரிபுகழான்கவராத மேகலையால்குறைவிலமே. (அ)

முன்	முன்பொருகாலத்தில்	ஊதி	(சங்கை) ஊதி
வரி வளையால்	வரிகளையுடைய சங்கில் நின்று முண்டான	இரு நிலம்	விசாலமான பூமண்டலத்தினுடைய
குறைவு இல்லா பெரு முழக்கால்	மிகப்பெரிய கோஷத்தினாலே	துயர் தவிர்த்த	(பெரும்பாரத்தினாலுண்டான) கஷ்டத்தை போக்கினவனும்,
எரி அழலம்	கிளர்ந்தெரிகிற (பயமாகிற) அக்நியானது	தெரிவு அரிய சிவன் பிரமன் அமரர் கோன்	(இவ்வுபகாரத்திற்காக) அறியமுடியாத சிவன் பிரமன் இந்திரன் ஆகிய இவர்கள்
அடங்காரை புக	பகைவர்களிடத்துப் புகும்படியாக		

பணிந்து	வணங்கி	கவராத	விரும்பாத
ஏத்தும்	துதிக்கப்பெற்ற	மேகலையால்	அரைவடத்தில்
விரி புகழான்	பரந்த புகழையுடையனுமான எம்பெருமான்	குறைவு இலம்	அபேக்ஷையுடையோமல்லோம்.

* * * [வரிவளையால்.] மண்ணின்பாரம் நீக்குதற்கே வடமதுரைப் பிறந்து விரோதிகளைத் தொலைத்து அமரர்கள் துதிக்க நின்ற பெருமான் விரும்பாத மேகலை எனக்கு ஏதுக்கென்கிறாள்.

வரிவளையால் என்கிற பதம் 'குறைவில்லா' என்பதில் அந்வயிப்பதன்று, 'பெருமுழக்கால்' என்பதில் அந்வயிப்பதாகும்; 'ஸ்ரீபாஞ்சஜன்யத்தாலுண்டான மஹாகோஷத்தாலே' என்றபடி. "படைபோர்புக்கு முழங்குமப் பாஞ்சசன்னியம்" என்கிறபடியே பாஞ்சசன்னியம் முழங்கினவளவிலேயே எதிரிகள் குடல் குழம்பிக் குழறிப் போவர்கள். பாரதயுத்தம் முதலிய பிரகரணங்களில் இதன் பெருமை அறியத்தக்கது.

கண்ணபிரானையன்றி மற்று எவனையும் கனவிலுங் கருதாதிருந்த ருக்மிணிப்பிராட்டிக்கு சிசுபாலனோடு விவாஹம் நடத்துவதாகக் கோடித்து விதித்தமாயிருந்த ஸமயத்தில் கண்ணபிரானது வரவை யெதிர்பார்த்திருந்த அப்பிராட்டியின் நெஞ்சு முறிந்துபோய் இனி நாம் உயிர் துறப்பதே நல்லுபாயம் என்று நிச்சயித்திருந்த க்ஷணத்தில் கண்ணபிரான் மிகவிரைந்து எழுந்தருளிப் புறச்சோலையிலே நின்று தனது ஸ்ரீபாஞ்சஜந்யத்தைத் திருப்பவளத்திலே வைத்தூத, அவ்வோசை ருக்மிணிப்பிராட்டியை மகிழ்வித்தவளவேயன்றி, சிசுபாலனையும் அவனைச்சார்ந்தவர்களையும் எரியழலம் புகச்செய்தமை ப்ரஸித்தம்; இப்படிப்பட்ட இதிஹாஸங்கள் இங்குக் கொள்ளத்தக்கன.

[தேரிவரிய இத்பாதி.] எம்பெருமான் எங்கெங்கு வெற்றிபெற்று நிற்கின்றானோ அங்கங்கெல்லாம் சிவனும் பிரமனுமிந்திரனும் முதலானவர்கள் பணிந்து ஏத்துவர்கள்; அப்படி அவர்கள் ஏத்துவதை பரபரனை எம்பெருமானுக்கு ஒரு பெருமையன்றாகிலும், தூர்மானங் கொண்டாடித் திரியும் அத்தெய்வங்கள் அந்த தூர்மானந் தவிர்ந்து காலவிசேஷங்களிலே எம்பெருமானைப் பணிந்தேத்துகை அவர்களுக்கும் ஸ்வரூபலாபமாய் எம்பெருமானுக்கும் ஒருவாறு ஸந்தோஷகரமாயிருக்கையாலே ஆழ்வார்கள் அதனை ஒருபொருளாக எடுத்துக் கூறுவர்கள்.

மேகலை— மேகலா என்ற வடசொல் திரிபு. ... ... (அ)

மேகலையால்குறைவில்லா மேலிவுற்றவகலல்குல் *
போகமகள்புகழ்த்தந்தை விறல்வாணன்புயம்துணித்து *
நாகமிசைத்துயில்வான்போல் உலகெல்லாம்நன்கோடுங்க *
யோகணைவான்கவராத உடம்பினல்குறைவிலமே * (கூ)

மேகலையால்	உடையழகினால்
குறைவு இல்லா	குறையற்றவளும்
மெலிவு உற்ற	ஸௌகுமார்யத்தன்மை பொருந்தியவளும்
அகல் அல்குல்	அகன்ற நிதம்ப ப்ரதேசத்தையுடையவளும்
போகம்	போகத்திற்குரியவளுமான
மகள்	உஷையென்னும் பெண்ணுக்கு
தந்தை	தகப்பனென்கிற
புகழ்	புகழையுடையனாய்

விறல்	பலிஷ்டனான
வாணன்	பாணாஸுரனுடைய
புயம்	தோள்களை
துணித்து	அறுத்தொழித்தவனாய்,
நாகம் மிசை	ஆதிசேஷன்மீது
துயில்வான் போல்	உறங்குவான்போலே
உலகு எல்லாம்	ஸகலலோகமும்
நன்கு ஒடுங்க	நன்மையிலே சேரும்படி
யோகு அணைவான்	உபாயசிந்தை பண்ணுமவனான எம்பெருமான்
கவராத	விரும்பாத
உடம்பினால் குறைவு இலம்	உடம்பில் அபேக்ஷையுடையோமல்லோம்.

* * * [மேகலையால்.] வாணனுயிரம் தோள்துணித்த பெருமான் விரும்பாத உடம்பு எனக்கு ஏதுக்கு? என்கிறாள். "மேகலையால் குறைவில்லா" என்பது பாணாஸுரபுத்ரியான உஷைக்கு அடைமொழி. மேகலை என்பதைக் கீழ்ப்பாசுரத்திற்போலே மேகலா என்னும் வடசொல்லின் திரிபாகக்கொள்ளவுமாம்; அன்றி, 'மே-கலையால்' என்று இரண்டு சொல்வடிவமாகக்கொண்டு, விரும்பத்தக்க [கலை] வஸ்த்ரத்தினால் என்று கொள்ளவுமாம். "நம்மும் மேவும் நசையாகும்மே" என்பது தொல்காப்பியம். மேம்பாடுடைய கலையினால் என்னவுமாம்.

"உஷைக்குக் கூறையுடை அழகியதாயிருக்கும்போலேகாண்" என்பராம் வங்கிப்புரத்து நம்பி. அல்குல்—மத்யப்ரதேசம். அல்குலென்று பெண்குறியையே சொல்லுவதாகப் பலர் பிரமித்திருப்பதுண்டு. திருக்கோவையார் முதலிய நூல்களில் சிற்சிலவிடங்களில் அப்பொருளில் பிரயோகம் கண்டாலும் அருளிச்செயல்களில் காண்கிற பிரயோகம் அப்பொருளில் அல்ல. "திருமலிந்து திகழ்மார்வு தேக்கவந்தென்னல்குலேறி" என்ற பெரியாழ்வார் திருமொழியும் "பூந்துகில் சேரல்குல்" என்ற பெருமாள் திருமொழியும் முதலாயின காண்க.

பாணாஸுரனென்பவன் ஒருகாலத்தில் சிவபிரானது நடனத்தைக்கண்டு அதற்குத் தனது இரண்டுகைகளால் மத்தளம் தட்ட, சிவபெருமான் அருள் கூர்ந்து அவனுக்கு ஆயிரங் கைகளையும் நெருப்பு மதிளையும் அளவிறந்த வலிமையையும் மிக்கசெல்வத்தையும் தான் தனது பரிவாரங்களோடு அவன் மாளிகை வாசலில் காவல் செய்திருத்தல் முதலிய வரங்களையும் தந்தனன். அந்த பாணாஸுரனுடைய புதல்வியாகிய உஷையென்பவள் ஒருநாள் ஒரு புருஷனோடு தான் கூடியதாகக் கனக்கண்டு, முன் பார்வதி அருளியிருந்தபடி அவனிடத்தில் மிக்க ஆசைபற்றியவளாய்த் தன் உயிர்த்தோழியான சித்திரலேகைக்கு அச்செய்தியைத் தெரிவித்து, அவள் மூலமாய் அந்தப் புருஷன் ஸ்ரீக்ருஷ்ணனுடைய பௌத்திரனும் ப்ரத்யும்நனது புத்திரனுமாகிய அநிருத்தனென்று அறிந்துகொண்டு 'அவ

னைப் பெறுதற்கு உபாயம் செய்ய வேண்டும்' என்று அத்தோழியை வேண்ட, அவள் தன் யோகவித்தை மகிமையினால் த்வாரகைக்குச் சென்று அநிருத்தனைத் தூக்கிக்கொண்டுவந்து அந்தப்புரத்திலேவிட, உஷை அவனோடு போகங்களை அநுபவித்துவர, இச்செய்தியைக் காவலாளரால் அறிந்த பாணாஸுரன் தன் சேனையுடன் அநிருத்தனை யெதிர்த்து மாயையினால்பொருது நாகாஸ்த்ரத்தினால் கட்டிப் போட்டிருக்க, த்வாரகையிலே அநிருத்தனைக் காணாமல் யாதவர்களெல்லாரும் கலங்கி யிருந்தபோது, நாரதமாமுனிவனால் இவ்வரலாறு சொல்லப்பெற்ற ஸ்ரீக்ருஷ்ணபகவான், பெரியதிருவடியை நினைத்தருளி, உடனே வந்துநின்ற அக் கருடாழ்வானது தோளின்மேலேறிக்கொண்டு பலராமன் முதலானோரோடுகூட பாணபுரமாகிய சோணிதபுரத்திற்கு எழுந்தருளும்போதே, அப்பட்டணத்தின் ஸமீபத்திற் காவல் செய்துகொண்டிருந்த சிவபிரானது பிரமதகணங்கள் எதிர்த்துவர, அவர்களையெல்லாம் அழித்து, பின்பு சிவபெருமானால் ஏவப்பட்டதொரு ஜ்வரதேவதை மூன்று கால்களும் மூன்று தலைகளுமுள்ளதாய் வந்து பாணனைக் காப்பாற்றும் பொருட்டுத் தன்னோடு யுத்தஞ்செய்ய, தானும் ஒரு ஜ்வரத்தை யுண்டாக்கி இதன் சக்தியினாலே அதனைத் துரத்திவிட்டபின்பு, சிவபெருமானது அநுசரர்களாய்ப் பாணாஸுரனது கோட்டையைச் சூழ்ந்துகொண்டு காத்திருந்த அக்நிதேவர் ஐவரும் தன்னோடு எதிர்த்துவர, அவர்களையும் த்வம்ஸம் பண்ணி, பாணாஸுரனோடு போர்செய்யத் தொடங்க, அவனுக்குப் பக்கபலமாகச் சிவபெருமானும் ஸுப்ரஹ்மண்யன்முதலிய பரிவாரங்களுடன் வந்து எதிர்த்துப் பொரிட, கண்ணன் தான் ஜ்ரும்பணாஸ்த்ரத்தைப் பிரயோகித்துச் சிவன் ஒன்றுஞ் செய்யகில்லாமல் கொட்டாவி விட்டுக் கொண்டு சோர்வடைந்து போம்படி செய்து, ஸுப்ரஹ்மண்யனையும் கணபதியையும் ஹுங்காரங்களால் ஓறுதது ஓட்டி, பின்னர் அனேகமாயிரஞ் சூரியர்க்குச் சமனான ஸுதர்சனாழ்வானை யெடுத்துப் பிரயோகித்து அப்பாணனது ஆயிரந்தோள்களையும் தாரைதாரையாய் உதிரமொழுக அறுத்து அவனுயிரையும் சிதைப்பதாக விருக்கையில் பரமசிவன் அருகில்வந்து வணங்கிப் பலவாறு துதித்துப் பிரார்த்தித்ததனால் அவ்வாணனை நான்கு கைகளோடும் உயிரோடும் விட்டருளினனென்ற வரலாறு இங்கு அறியத்தக்கது.

இன்னமும் பாணன்போல்வார் எதிரிடுவார் உண்டாகில் அவர்களையும் நிரஸித்து உலகங்களை வாழ்விக்கும் வகையைச் சிந்தனை செய்துகொண்டு யோக நித்திரைபுரியுமவனான எம்பெருமான் விரும்பியணையாத உடம்பை நான் கட்டிக் கொண்டு கிடக்கவோ? என்றுளாயிற்று (௯).

உடம்பினால்குறைவில்லா உயிர்பிரிந்தமலைத்துண்டம் *
கிடந்தனபோல்துணிபலவா அசுரர்குழாம்துணித்துகந்த *
தடம்புனலசடைமுடியன் தனியொருகூறமர்ந்துறையும் *
உடம்புடையான்கவராத உயிரினால்குறைவிலமே. (௧௦).

உடம்பினால் குறைவு இல்லா	பெரியவுடம்பு படைத்த	ஒரு கூறு	(தனது திருமேனியின்) ஒரு பக்கத்திலே,
அசுரர் குழாம்	அசுரக்கூட்டங்களை	தடம் புனல சடை முடியன் தனி அமர்ந்து உறையும்	பரந்த கங்காதீர்த்தத்தைத் தரித்த ஜடாமகுடத்தை யுடையனான சிவபிரான் பொருந்தி வாஸம் பண்ணப்பெற்ற
உயிர் பிரிந்த மலை துண்டம் கிடந்தன போல்	உயிரைவிட்டு நீங்கின பர்வதகண்டங்கள் கிடந்தாற்போலே	உடம்பு உடையான்	திருமேனியை யுடையவனான எம்பெருமான்
பல துணி ஆ	பலபல கண்டங்களாம்படி	கவராத	விரும்பாத
துணித்து	துண்டித்து	உயிரினால் குறைவு இலம்	ஆத்மாவில் அபேக்ஷை யுடையோமல்லோம்.
உகந்த	(ஆச்ரிதவிரோதிகள் தொலைந்தனவென்று) திருவுள்ள முவந்தவனாய்,		

* * * [உடம்பினால் குறைவில்லா.] முன்னடிகளால் எம்பெருமானுடைய விரோதிநிரஸந ஸாமர்த்தியம் பேசப்படுகிறது. "உடம்பினால் குறைவில்லா" என்கிற அடைமொழி அசுரர்குழாத்திலே அந்வயிக்கும். "ஊன்மல்கிமோடு பருப்பார்" என்கிறபடி கண்ட பொருள்களையும் தின்று உடம்பை வளர்த்திருப்பர்கள் அசுரர்கள். ஆத்மாவைப் போஷியாதே தேஹபோஷணத்திலேயே நோக்குடையவர்கள் என்றபடி.

பண்டொருகாலத்தில் மலைகளெல்லாம் இறகுகளோடு கூடி வானத்திலெழுந்துதிரிந்து நாடுநகரங்களுக்கு விநாசங்களை விளைத்திட்டனவென்றும், அப்போது தேவேந்திரன் தனது வஜ்ராயுதத்தினால் அம்மலைகளின் இறகுகளைத் துணித்து வீழ்த்தனன் என்றும் இதிஹாஸங்கள் கூறும். எம்பெருமானால் துணித்து வீழ்த்தப்பட்ட அசுரர்கள் அம்மலைகளோடு ஒப்பிடத்தக்கவர்களெனக் கொண்டு "உயிர்பிரிந்த மலைத்துண்டம் கிடந்தனபோல்" எனப்பட்டது. "ஸப்ராணனாய்க்கொண்டு ஸஞ்சரித்த பர்வதங்கள் இந்த்ரன் கையில் வஜ்ராயுதத்தாலே பல கூறும்படி துணியுண்டு கிடந்தாற்போலே அஸுரவர்க்கத்தைப்பல கூறும்படி துணித்துகந்தானாயிற்று" என்பது நம்பிள்ளையீடு.

ஸுதர்சநசதகத்தில் "க்ருத்தஸம்ரோஹமஹேந்த்ரநாக்ருதஸகருதக ஸ்பந்ததாநா" என்றதை நோக்குமளவில் திருவாழியாழ்வான்தானே மலைகளைத் துணித்ததாக ஏற்படுகின்றதே! என்று சிலர் சங்கைகொள்வர்கள்; இதற்குப் பரிஹாரமாவது அந்த ஸுதர்சநசதகத்திலேயே "ப்ரக்ஞ்யப்ரேயஷேஹம்ஷாநவபர்ஸேவஷ்ரவிநீ — சக்திர்யஸ்யேஷா தம்ஷ்ட்ராநக பரசுமுக வ்யாபிநீ." என்றருளிச் செய்த கணக்கிலே திருவாழியாழ்வானுடைய சக்தியின் ஆவேசங்கொண்டே வஜ்ராயுதம் செய்த செயலாகையாலே இரண்டு வகையாகவும் சொல்லக்குறையில்லை யென்பதாம்.

தடம்புனலசடைமுடியன் தனியொருகூறமர்ந்துறையு முடம்புடையான்= தன்னுடைய சேஷத்வத்தைச் சிலகாலங்களிலே மறந்து தன்னையே ஈச்வரனாக

அபிமானிக்கும் அர்ப்பாணியான ருத்ரனுக்கும் உடம்பு கொடுக்குமெம்பெருமான் எனக்கு உடம்பு கொடுத்திலனென்றும் பின்னை இந்த வுயிர் எனக்கு ஏதுக்கு? என்கிறார். "உயிரினால் குறைவிலம்" என்றது இந்த ஆத்மா தொலைந்து போகட்டுமென்றபடி. நித்யமான ஆத்மவஸ்து வஸ்வயமே தொலைந்து போகுமென்று குசோத்யம் செய்யவேண்டா; எம்பெருமானுடைய விருப்பத்திற்கு உடலாவதே ஆத்மாவுக்குச் சிறந்த ஸ்வரூபம் என்று காட்டினபடி. ஆசார்ய ஹ்ருதயத்தில் "சேஷத்வ பஹிர்ப்பூதஜ்ஞாநாநந்தமயனையும் ஸஹியாதார் த்யாஜ்யோபாதியை ஆதரியார்களே" என்றருளிச்செய்த ஸ்ரீஸூக்தியும், மும்முக்ஷுப்படியில்; "உயிரினால் குறைவிலமென்கிறபடியே த்யாஜ்யம்" என்றருளிச்செய்த ஸ்ரீஸூக்தியும் இங்கு உணரத்தக்கன. (கo)

உயிரினால்குறைவில்லா உலகேழ்தன்னுள்ளொடுக்கி *
தயிர்வெண்ணெயுண்டானைத் தடங்குருகூர்ச்சடகோபன் *
செயிரில்சொல்லிசைமாலை ஆயிரத்துளிப்பத்தால் *
வயிரம்சேர்பிறப்பறுத்து வைகுந்தம்நண்ணுவரே. (கக)

உயிரினால் குறைவு இல்லா	எண்ணிறந்த ஆத்மாக்களையுடைய		தடம் குருகூர்சடகோபன்—;
ஏழ் உலகு	ஸமஸ்த லோகங்களையும்	செயிர் இல்	குற்றமற்ற
தன்னுள் ஒடுக்கி	தன்னுடைய ஸங்கல்பத்திலேயடக்கி வைத்து	இசை	இசையோடு கூடின
தயிர் வெண்ணெய் உண்டானை	தயிரும் வெண்ணெயும் அமுது செய்தவனான எம்பெருமான் விஷயமாக	சொல்மாலை	சொல்மாலையாகிய
		ஆயிரத்துள்	ஆயிரம்பாட்டினுள்ளே
		இ பத்தால்	இந்தப்பதிகத்தினால்
		வயிரம் சேர் பிறப்பு அறுத்து	உரமேறின ஸம்ஸாரத்தை அடியறுத்து
		வைகுந்தம்	பரமபதத்தை
		நண்ணுவர்	கிட்டப்பெறுவர்.

* * * [உயிரினால் குறைவில்லா.] இருள் தருமாஞாலத்தில் பிறப்பையறுத்துப் பரமபதம் பெறுதற்கு இத்திருவாய்மொழி ஸாதனமாயிருக்குமென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிறது.

உயிரினால் குறைவில்லா என்றது ஒரு ஜீவாத்மாவும் தப்பாதபடி என்றவாறு. "நெற்றி மேல்கண்ணானும் நிறைமொழிவாய் நான்முகனும் நீண்டநால்வாய், ஒற்றைக்கை வெண்பகட்டிலொருவனையு முள்ளிட்டவமரரோடும், வெற்றிப்போர்க்கடலரையன் விழுங்காமல் தான் விழுங்கியுய்யக்கொண்ட" என்றும், "மண்ணோடும் விண்ணோடும் வானவரும் தானவரும் மற்றுமெல்லாம், உண்ணாத பெருவெள்ள முண்ணாமல் தான் விழுங்கி யுய்யக்கொண்ட" என்றும் திருமங்கையாழ்வாரருளிச் செய்தபடியே இந்திரன் பிரமனீசனென்றிவர்களில் ஒருவரும் தப்பாமல் என்றதாயிற்று.

உலகேழ் தன்னுள்ளொடுக்கித் தயிர்வெண்ணெயுண்டானை= இங்கே நம்பிள்ளையீடுகாண்மின்;—"தயிரும் வெண்ணெயும் களவுகாணப்புகுகிறபோது 'செருப்பு வைத்துத் திருவடி தொழுவாரைப்போலே அந்யபரதைக்கு உடலாக வொண்ணாது' என்று எல்லாலோகங்களுக்கும் வேண்டும் ஸம்விதானம் தன்ஸங் கல்பத்தாலே செய்து பின்னையாயிற்று வெண்ணெயமுதுசெய்தது." என்பதாம். "உலகேழ் தன்னுள்ளொடுக்கித் தயிர்வெண்ணெயுண்டான்" என்கிற சொற்செறி வின் அழகை நோக்கி நம்பிள்ளை இங்ஙனே யருளிச்செய்தது இன்சுவைமிக்கது. காலில் செருப்போடே கோவிலுக்குச் செல்பவர்கள் கோபுரவாசற்படியிலே செருப்பை விட்டிட்டு உள்ளேபுகுந்து பெருமாளை ஸேவிக்குமளவிலும் செருப் பிலே நினைவு இடையறாமல் செல்லுகின்றபடியாலே "ஸ்வாமிந்! தீர்த்தம் ஸாதிக்க; திருத்துழாய்ஸாதிக்க" என்னவேண்டும்போதும் 'செருப்புஸாதிக்க' என்பர்களாம்; எம்பெருமானும் உலகங்களுக்குச் செய்யவேண்டிய ஸம்விதா னங்களைச் செய்யாமல் நெய் தயிர் வெண்ணெய் களவுகாணப் புகுந்தால் இடை யிடையே அந்த உலகநினைவும்உண்டாகி, செருப்பைவைத்துத் திருவடிதொழுத கதையாக ஆய்விடுமென்றெண்ணி, எல்லா லோகங்களுக்கும் வேண்டும் ஸம் விதானங்களைத் தன் ஸங்கல்பத்தாலே செய்துமுடித்து அந்யபரதைக்கு இட மறுத்துக்கொண்டு வெண்ணெயமுதுசெய்யப் புகுந்தானென்று ரஸோக்தி யிருக்கிறபடி. "கர்ப்பிணிகள் வயிற்றில் பிள்ளைக்கீடாக போஜநாதிகள் பண் ணுமாபோலே உள்விழுங்கின லோகங்களுக்கு ஜீவனமாகத் தயிர்வெண்ணெ யுண்டான்" என்ற ஈட்டு ஸ்ரீஸூக்தியும் பரமபோக்யம்.

இப்படிப்பட்ட எம்பெருமான் விஷயமாக ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரத்துளிப்பத்தால் ஸம்ஸாரத்தை அடியறுக்கலாமென்றதாயிற்று.

வயிரம்சேர் பிறப்பு=வேண்டாவென்று கழித்தாலும் விடாதபடிகாழ்ப்பு ஏறிக்கிடக்கிற ஸம்ஸாரம்.

செயிர் இல்=சொற்குற்றமும் பொருட்குற்றமும் இல்லாத என்றபடி. (கக)

எட்டாந் திருவாய்மொழி—உரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ :

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளீ.

ஸௌந்த³ர்யாதௌ³ ஸ்வகீயே ஹ்ருதி³ வநநிகரே பூர்ணதாயாம் ச காந்தௌ
ஸம்யக்³ஜ்ஞாநே ப்ரகாஶே வலயரஶநயோர் வர்ஷ்மணி ஸ்வஸ்வரூபே।
ஸ்யாத்³விஷ்ணோர்யத்³யுபேக்ஷா, ததி³த³மகி²லமுந்மூலநீயம் ததீ³யை:
ஊசே காரிஸூநுஸ்தது³பரி ஶிவாத்³யாஶ்ரிதாங்கே³ ॥

1. ஸ்வகீயே ஸௌந்தர்யாதௌ. *மாறாளன் கவராத மணிமாமை குறைவிலமே* தம்முடைய ஸௌந்தர்யம் முதலானவற்றில். (உத்தரார்த்தத்தின் முதலிலுள்ள ஸ்யாத் விஷ்ணோர் யத்யுபேக்ஷா என்பதில் ஸப்தம்யந்தபதங்களுக்கெல்லாம் அந்வயம் அறிக.)

2. ஹ்ருதி கநிகரேச. *மணிமாயன் கவராத மடநெஞ்சால் குறைவிலமே.* மூலத்தில் நெஞ்சுமாத்திரம் சொல்லப்பட்டிருந்தாலும் உபலக்ஷணமர்யாதையினால் கரணங்களெல்லாவற்றையும் கொள்ளவேணுமென்று திருவுள்ளம்பற்றி 'வநிகரெ' என்கிறார். வநம்—இந்திரியம். நிகர:—ஸமூஹம். மநஸ்ஸு முதலான கரணங்களிலும் என்றபடி.

3. பூர்ணதாயாம் ச. *நெடுமாயன் கவராத நிறைவினால் குறைவிலமே* பூர்ணதையாவது அடக்கம்.

4. காந்தௌ. *சிறையிலுநர் கவராத தளிர் நிறத்தால் குறைவிலமே.* தேஹகாந்தியைச் சொன்னபடி.

5. ஸம்யக் ஜ்ஞானே. *அளிமிக்கான் கவராத அறிவினால் குறைவிலமே* சிறந்த ஞானம்.

6. ப்ரகாசே. *கிறியம்மான் கவராத கிளரொளியால் குறைவிலமே* ஸமுதாயசோபை.

7, 8. வலயரசநயோ:. *வளரொளியான் கவராத வரிவளையால் குறைவிலமே* *விரிபுகழான் கவராத மேகலையால் குறைவிலமே* கைவளையும், மேகலையும்.

9. வர்ஷ்மணி. *யோகணைவான் கவராத உடம்பினால் குறைவிலமே* சரீரம்.

10. ஸ்வஸ்வரூபே. *உடம்புடையான் கவராத உயிரினால் குறைவிலமே* ஆத்மஸ்வரூபம்—ஆகிய இவற்றிலே; விஷ்ணோ:—எம்பெருமானுக்கு, உபேக்ஷா ஸ்யாத் யதி– வெறுப்பு இருக்குமாகில்; இவற்றை எம்பெருமான் விரும்பானாகில் என்றபடி. ததீயை:— பகவத் பக்தர்களாலே ; தத் இதம் அகிலம்—

இவையித்தனையும்; உந்மூலநீயம்—உதறித் தள்ளவேண்டியவை; இதி காரிஸூநு: ஊசே என்று (ஏறாளுமிறையோனில்) நம்மாழ்வார் அருளிச்செய்தார். [தது பரிஇத்யாதி] ருத்ரன் முதலானவர்களுக்குங்கூடத் தன் திருமேனியிலே இடங்கொடுத்த குணவானை எம்பெருமான் என்னை உபேக்ஷிப்பது தகுதியோ? என்கிற நிர்வேதத்தை விசேஷித்து முதற்பாட்டிலும் ஒன்பதாம் பாட்டிலும் காட்டிக்கொண்டமை சொன்னபடி.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

ஸர்வம் க்ரந்த³ந்நபி ஶௌரிர்முக்²யகாம:
ஸ்வோபேக்ஷணைகபரதாமவயாய ஶௌரே:।
தத்³வேஷதாதி³ரஹிதே ஸகலே ஸ்வகீயே
ஸ்வஸ்மிந்நபி ஸ்ப்ருஹநிவ்ருத்திமதா²ஷ்டமேऽஸ்மிந் ॥

(கருத்து.) கீழ் *சீலமில்லாச் சிறியனில் கூவிக் கூவிக் கதறியழுதும் எம்பெருமானுடைய ஸேவை கிடைக்கப் பெறுதவராய் அப்பெருமான் தம்மை உபேக்ஷிப்பதிலேயே திருவுள்ளமாயிருக்கிறான் போலும் என்று நிச்சயித்து, அவனுடைய அடிமைக்கு உறுப்பல்லாத ஆத்மீயங்களெல்லாவற்றிலும் (கடைசியாக) ஆத்மாவிலும் விருப்பமொழிந்தபடியை எட்டாவது திருவாய்மொழியிலே அருளிச்செய்தாரென்கை.

ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

ஏறுதிருவுடைய ஈசனுகப்புக்கு
வேறுபடிலென்னுடைமை மிக்கவுயிர்—தேறுங்கால்
என்றனக்கும்வேண்டா வெனுமாறன்தாளைநெஞ்சே
நந்தமக்குப்பேருக நண்ணு.

ஏறு திரு உடைய	தனது திருமார்பில் ஏறி வீற்றிருக்கின்ற பெரிய பிராட்டியாரை யுடையனை	தேறுங்கால்	ஆராயுமிடத்து
ஈசன்	எம்பெருமானுடைய	என் தனக்கும் வேண்டா எனும்	எனக்கும் வேண்டிய தில்லையென்று வெறுத்துரைத்த
உகப்புக்கு	வேண்டுதலுக்கு	மாறன்	ஆழ்வாருடைய
வேறுபடில்	விபரீதமானால்	தாளை	திருவடிகளை
என் உடைமை	மணிமாமை முதலிய ஆத்மீயங்களும்	நெஞ்சே	மனமே!
		நம்தமக்கு	நமக்கு
மிக்க	இவற்றினும் உயர்ந்த	பேறு ஆக	ப்ராப்யமாக
உயிர்	ஆத்மாவும்	நண்ணு	விரும்புவாயாக.

கீழ்த்திருவாய்மொழியில் கூவிக்கூவி நெஞ்சுருகிக் கண்பனி சோரநின்று எப்பொழுதும் கண்ணீர்கொண்டு ஆவிதுவர்ந்து துவர்ந்து நள்ளிராவும் நன்பகலும் ஓலமிட்டழைத்துக் கதறினவிடத்திலும் எம்பெருமான் வந்து முகங்காட்டாமையாலே "ப்ராப்தனாய் சீலவானாய் விரோதிகளைக் கிழங்கெடுக்கவல்லனாயிருக்கின்ற அவன் இந்த நிலைமையிலும் வந்து முகங்காட்டாதது இத்தலையை வேண்டாமையாலன்றோ; அவனுக்கு வேண்டாத ஆத்மாத்மீயங்கள் எனக்குத்தான் ஏதுக்கு?" என்று வெறுத்து அவற்றில் நசையற்றபடியைப் பேசியருளின பராங்குசனுடைய பதவிணையே நமக்குப் பரமபுருஷார்த்தமென்றதாயிற்று.(38)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

159935

திருவாய்மொழி நான்காம்பத்து
ஒன்பதாந்திருவாய்மொழி—நண்ணாதார்முறுவலிப்ப.

உரையவதாரிகை. கீழ்த்திருவாய்மொழியில், உடம்பு வேண்டா, உயிர் வேண்டா, அது வேண்டா, இது வேண்டா என்று ஆத்மாத்மீயங்களையெல்லாம் வெறுத்து உதறித்தள்ளப்பார்த்தார். தள்ளினால் தள்ளுண்டு போமவையோ அவை? பேறு பெறுவதற்கு எப்படி அவன்கைபார்த்திருக்கவேணுமோ, அப்படியே முடிகைக்கும் அவன்கைபார்த்திருக்கவேண்டுகையாலே 'எம்பிரானே! என்னை நீதானே முடித்திடாய்' என்கிறார். ஆழ்வாருடையஆர்த்தி பேச்சுக்கு நிலமல்லாதபடி பெருகினமை இத்திருவாய்மொழியிலே விளங்காநின்றது.

ஆழ்வாருடைய ஆர்த்திக்கு மூன்று ஹேதுக்களுண்டு; எம்பெருமானோடு கலவி பெறாமல் பிரிந்து படும் ஆர்த்தி ஒன்று; ஸம்ஸாரிகளோடு ஸஹவாஸம் பொறுக்க வொண்ணாததாய் அத்தாலே வரும் ஆர்த்தி ஒன்று; இந்திரியங்கள் விஷயங்களிலே கொண்டுபோய் மூட்டி அநர்த்தங்களை விளைக்கையாலே அத்தாலேவரும் ஆர்த்தி ஒன்று. இவற்றுள் எம்பெருமானுடைய பிரிவினால் வந்த ஆர்த்தி கீழ்த்திருவாய்மொழியிலே கண்டது. இந்திரியங்களால் வரும் ஆர்த்தி மேலே *உண்ணிலாவியவைவரால்* என்கிற திருவாய்மொழியிலே காணலாகும். ஸம்ஸாரிகளினிடையே ஸஹவாஸம் பொறுக்கவொண்ணாமையாலாகும் ஆர்த்தி இத்திருவாய்மொழியில் காண்பதாகும்.

எம்பெருமானைக் காணப்பெறாவிடினும், எம்பெருமானைக் காணப்பொறாத பாவிகளின் இடையிலே இருப்பாவது இல்லாமலிருக்குமாகில் ஒருவாறு ஆறியிருக்கலாம். அப்படியல்லாமல் உண்டியே உடையே உகந்தோடுமிம்மண்டலத்தினிடையிலே மிக விபரீதமான லோகயாத்ரைகளைக் கண்ணாலே கண்டு கொண்டு இருப்பதென்றால் இது ஆழ்வார்க்கு எங்ஙனே ஸஹிக்கத்தக்கதாகும்?

திருமங்கையாழ்வார் "மருவினிய தண்ணார்ந்த கடன்மல்லைத் தலசயனத் துறைவாரை எண்ணாதே யிருப்பாரையிறைப்பொழுது மெண்ணோமே" என்றும் "கண்ணாளன் கண்ணமங்கை நகராளன் கழல்சூடி அவனையுள்ளத்து எண்ணாத மானிடத்தை யெண்ணாதபோதெல்லாம் இனியவாறே" என்றும் அருளிச்செய்தார். இதனால் தேறுவது என்ன? எம்பெருமானைச் சிந்திக்கையாகிற பேறு

கிடைக்காதொழியினும் எம்பெருமானிடத்திலே அன்பில்லாத பாவிகளைப் பற்றின ஞாபகம் வாராமலிருப்பதே சிறந்தது என்பதாம்.

ஸ்ரீவிபீஷணாழ்வான் "இராமபிரானது கோஷ்டியிலே நமக்கு ப்ரவேசம் கிடைக்கட்டும்; கிடைக்காமற் போகட்டும்; மஹாபாபியான இராவணனுடைய கண்வட்டத்தில்நின்றும் எழுந்து அப்பால் சென்றால் போதும்" என்று துணிந்து * உத்பபாத கதாபாணி: சதுர்ப்பிஸ்ஸஹ ராக்ஷஸை: * என்கிறபடியே சடக்கென எழுந்து சென்றதுபோல, ஆழ்வாரும் இவ்விருள் தருமாஞாலத்தில் நின்றும் சடக்கெனவெழுந்து செல்லத்துணிவு கொண்டாலும், அது தம்முடைய இஷ்டப்படி நிறைவேறுவதன்றே; எம்பெருமான் திருவுள்ளத்தினாலாகவேண்டிய தன்றோ இது. ஆகையாலே "உனகழற்கே வரும்பரிசு பணிகண்டாய் சாமாறே" என்றும், "கூமாறே விரைகண்டாய் அடியேனைக் குறிக்கொண்டே" என்றும், "கோட்டையினிற் கழித்தென்னை உன் கொழுஞ்சோதியுயரத்துக் கூட்டரிய திருவடிக்கண் எஞ்ஞான்று கூட்டுதியே" என்றும் அளவற்ற ஆர்த்தி தோற்றப் பேசுகிறார்.

* வரம் ஹுதவஹஜ்வாலாபஞ்ஜராந்தர்வ்யவஸ்திதி:| ந சௌரிசிந்தாவிமுகஜநஸம்வாஸவைசஸம்=வரம் ஹுதவஹஜ்வாலா பஞ்ஜராந்தர் வ்யவஸ்திதி:, நசௌரி சிந்தாவிமுகஜநஸம்வாஸ வைசஸம்." என்கிறச்லோகம் இங்கு அநுஸந்திக்கத்தக்கது. இதன் பொருளாவது—பற்றியெரிகிற நெருப்பி னிடையே வாழ்ந்தாலும் வாழலாம்; எம்பெருமானைச்சிந்தை செய்ய அறியாத பாவிகளுடனே கூடியிருத்தல் கூடாது என்பதாம்.

இத்திருவாய்மொழியின் அவதாரிகையை எம்பார் ஒருவகையாகவும் ஆழ்வான் ஒருவகையாகவும் யோஜிப்பர்களாம். எம்பார் யோஜிப்பதாவது—கீழே விவரித்தபடி. "உன்னையொழியப் புறம்பே பேறுமிழவுமாயிருக்கிற ஸம்ஸாரிகள் நடுவேயிருக்கிற விருப்பால் படுகிற க்லேசமானது உன்னைப்பிரிந்திருந்துபடுகிற க்லேசத்தளவல்ல; உன்பிரிவை ஒருவாறு ஆற்றலாம்; இந்தமஹாபாபிகளான ஸம்ஸாரிகளினிடையிலே இருப்பதாகிற க்லேசம் ஒருவிதத்தாலும் ஆற்றப்போகவில்லை; ஆதலால் இவ்விருப்பைத் தவிர்த்தருளவேணும்" என்று பிரார்த்திப்பதாக எம்பாருடைய யோஜநை.

ஆழ்வானுடைய யோஜநை:—தம்முடைய ஆற்றாமைக்கு ஸம்ஸாரிகளில் ஆரேனும் கூட்டாவாருண்டோவென்று லோகயாத்ரையிலே கண் வைத்தாராம் ஆழ்வார்; தமக்கு பகவத் விஷயத்திலே எவ்வளவு ப்ராவண்யமோ அதற்கு மேற்பட்ட ப்ராவண்யம் அவர்களுக்கு சப்தாதி விஷயங்களிலேயாயிருந்தது. தாம் பகவத் விஷயத்திலே இழவாளராய் நோவுபடுகிறாப்போலே அவர்கள் விஷயாந்தரங்களிலே இழவாளராய் நோவுபடுவது கண்டார்: வாளேறு கண்டவனுக்குத் தேளேறு மாய்வதுபோல, [அதாவது, ஒருவன் தேள் கொட்டி நொந்துவாராநிற்க எதிரேயொருவன் வாளால் வெட்டுப்பட்டு நொந்து வந்தால் அந்தப் பெரு

நோவைக் கண்டவாறே தேள் கொட்டின சிறுநோவு தணியுமாபோல] ஸம்ஸாரிகளின் பேரிழவிலே ஆழ்வாருடைய ஆர்த்தி அஸத்கல்பமாயிற்று. (அதாவது) தம் இழவை மறந்து இவர்களுடைய இழவையே திருவுள்ளத்திற்கொண்டார்; உடனே எம்பெருமானை நோக்கி "பிரானே! இவர்களை இப்படித் துடிக்கவிட்டிருக்கலாமோ? ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தனாயிருக்கிற நீ இவர்களைக் கரைமரம் சேர்த்தேயாகவேணும்" என்று பிரார்த்தித்துத் திருவடிகளைப் பிடித்துக்கொண்டார்; "இவர்கள் அசேதனங்களன்றிக்கே சேதநராகையாலே இவர்களுக்கும் சிறிது ருசியுண்டாகியே தீரவேணுங்காணும்" என்று எம்பெருமான் அருளிச்செய்தான்; அதுகேட்ட ஆழ்வார், "பிரானே! சேதநர்களென்று பேர்மாத்திரமாய் அசேதநப்ராயங்களான இந்த ஜடங்கள் விஷயத்திலே இங்ஙனே திருவுள்ளமாகலாமோ? அவசியம் திருவுள்ளமிரங்கியருளவேணும்" என்று பிரார்த்திக்க; எம்பெருமான் சொன்னான்—"ஆழ்வீர்! இவர்களை அசேதனங்களாக நான் எப்படிக் கொள்ளமுடியும்? இவர்கள் உண்டி உடை முதலானவற்றைக் கொள்ளாமலில்லை; அவற்றிலே நல்லது தீயதுகளை ஆராய்ச்சி செய்யவல்லவர்களாயுமிருக்கின்றார்கள்; அப்படிப்பட்ட இவர்கள் விஷயாந்தரங்களிற்காட்டிலும் நம்முடைய வாசியை அறியாதேயிருந்தார்களென்றால், இவர்கள் தொலைந்து போகிறபடியே தொலைந்து போகட்டும் என்று கைவிடுவதுதவிர வேறு நம்மால் செய்யலாவதுண்டோ? இப்பாவிகளைப்பற்றின கவலையை நீரும் விட்டிடும்" என்றான். அதுகேட்ட ஆழ்வார், "பிரானே! ஆகில் இப்படிப்பட்டவர்களின் நடுவே என்னை ஏன் வைத்திருக்கிறாய்? இவ்விடத்தில்நின்றும் என்னை முன்னம் வாங்கவேணும்" என்ன; "ஆழ்வீர்! உம்மை முன்னமே வாங்கிவிட்டேன் காணும்; ஸம்ஸாரிகளோடு பொருந்தாதபடி உம்மைச் செய்துவைத்திருக்கிறேனல்லவா? இவ்வுலக யாத்ரையைச் சிந்தித்ததனால் உமக்குண்டான க்லேசமெல்லாம் தீரும்படி ஒன்று காட்டுகிறேன், காணும்" என்றுசொல்லிப் பரமபதத்திலே அபர்வாமமரர்கள் அடிமைசெய்யப் பெரியபிராட்டியாரும் தாமுமாக இருக்கிற விலக்ஷணமான விருப்பை எம்பெருமான் காட்டிக்கொடுக்க, "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்பக்கண்ட சதிர்கண்டொழிந்தேன் அடைந்தேனுன் திருவடியே" என்று அநுஸந்தித்துத் தரித்து க்ருதார்த்தராய்த் தலைக்கட்டுகிறார்—என்பதாம்.

இங்கு ஆழ்வானைப்பற்றி ஓர் இதிஹாஸம் ஈட்டில் அருளிச்செய்யப்படுகிறது;—ஆழ்வான் ஓரிடத்தே வழிபோகாநிற்க ஸர்ப்பத்தினால் பிடிக்கப்பட்டதவளை கூப்பிடாநிற்க, இது ஆரறியக் கூப்பிடுகிறதோ! என்று மோஹித்தாராம். "அரவவாய்க் கோட்பட்ட மண்டுகவொலி கேட்டு மதியெல்லாமுள் கலங்கி மயங்கி நின்ற பெருமானார்" என்று பின்புள்ளாரும் பேசினார்கள். .... (*)

நண்ணாதார்முறுவலிப்ப நல்லுற்றார்கரைந்தேங்க*
எண்ணாராத்துயர்விளைக்கும் இவையென்னஉலகியற்கை? *
கண்ணாளா! கடல்கடைந்தாய்! உனகழற்கேவரும்பரிசு *
தண்ணாவாதடியேனைப் பணிகண்டாய்சாமாறே. (க)

நண்ணுதார்	பகைவர்கள்	கடல் கடைந்தாய்	(தேவர்களுக்கு அமுதமளிக்கக்) கடலைக் கடைந்தவனே!
முறுவலிப்ப	மகிழ்ந்து சிரிக்கவும்	உன கழற்கே	உனது திருவடி வாரத்திலேயே
நல் உற்றார்.	நல்ல உறவினர்கள்	வரும் பரிசு	நான்வந்து சேரும்படி
கரைந்து ஏங்க	மனமுருகிவருந்தவும்	தண்ணவாது	காலதாமதமின்றியில்
எண் ஆரா துயர் விளைக்கும்	எண்ணமுடியாத துன்பங்களை விளைக்கின்ற வையான	அடியேனை	அடியேனை
இவை உலகு இயற்கை	இந்த லோகயாத்ரைகள்	சாம் ஆறு	மரணமடையும்படி
என்ன	என்னே!;	பணி	அருள்செய்யவேணும்;
கண் ஆளா	தயாளுவே!		

கலிநடாய்—முன்னிலையசை

* * * [நண்ணுதார்.] எம்பெருமானே! ஸர்வரக்ஷண ஸமர்த்தனாய் ஸர்வநிர்வாஹகனாய் நீ யிருக்க, இந்த ஸம்ஸாரிகள் அளவுகடந்த துயரங்களை யநுபவித்துக்கொண்டிருக்குமிருப்பு கண்டு என்னால் பொறுத்திருக்க முடியவில்லை; இவர்களுடைய ஆர்த்தியைத் தீர்ப்பதோ, அன்றி இவர்களுடைய இழவை நான் சிந்திக்கவொண்ணாதபடி என்னை முடிப்பதோ செய்யவேணும்—என்கிறார்.

உலகத்தில் ஒவ்வொருவர்க்கும் பகைவர் என்று சிலரும் நண்பர் என்று சிலரும் இருப்பர்களே; ஒருவனுக்கு ஓர் ஆபத்து நேர்ந்தால் 'அந்தோ! நேர்ந்ததே!' என்று அனைவரும் கூடி வயிறு பிடிக்கவேண்டியிருக்க, சிலர் உகந்து சிரிக்கும்படியும் சிலர் வருந்தும்படியுமாவதே! என்று லோகயாத்ரைக்கு வருந்துகிறாராழ்வார், இங்கு ஈட்டு ஸ்ரீஸூக்திகாண்மின்;—"ஒருவனுக்கு ஓர் அநர்த்தம் வந்தவாறே அற்றைக்கு முன்பு வெற்றிலை தின்றறியார்களேயாகிலும் அன்றாக ஒரு வெற்றிலை தேடித்தின்பது, ஓர் உடுப்புவாங்கியுடுப்பது, சிரிப்பதாகா நிற்பர்களாயிற்று."

எண்ணாராத் துயர்விளைக்குமிவை= நண்ணாதார் முறுவலிப்பதும் நல்லுற்றார் கரைந்து ஏங்குவதுமாகிய எல்லாம் ஆழ்வார்க்கு எண்ணாராத் துயரமாகத் தோற்றுகின்றது. எல்லாரும் எம்பெருமானையே பரமபந்துவாகக் கொண்டு அவனுக்கு ஒரு துன்பம் வந்தால் கரைந்தேங்கவும், அவனுக்கு இன்பம் மிகுந்தால் குதுகலிக்கவும் ப்ராப்தமாயிருக்க, ஆபாஸபந்துக்களுக்காகச் சிலர் வயிறு பிடிப்பதும், பகைமை பாராட்டிச் சிலர் முறுவலிப்பதும் ஆழ்வார்க்கு அஸஹ்யமாயிருக்கிறது.

* ஸதைகரூபரூபாய * என்கிறபடியே எப்போதும் ஒருபடிப்பட்டிருக்கிற எம்பெருமானுக்கும் துன்பம் விளைவதும் இன்பம் மிகுவதும் உண்டோவென்னில்; மங்களாசாஸநபரர்களுடைய கருத்தாலே உண்டென்க. "அசுரர்கள் தலைப்பெய்யில் யவங்கொலாங்கென்று ஆழுமென்னாருயிர்" என்றும் "அவத்தங்கள் விளையும் என் சொற்கொளந்தோ!" என்றுமுள்ள பாசுரங்களை நினைப்பது.

இவையென்னவுலகியற்கை!= அவரவர்களுக்கு லாபநஷ்டங்கள் உன்னளவிலேயாகாதே புறம்பேயாம்படி இப்படியொரு லோகயாத்ரையைப்பண்ணி வைப்பாயோ பெருமானே! என்கிறார்.

"நான் பண்ணிவைத்ததுண்டோ? அவரவர்கள் பண்ணின கருமங்களின் பலன் தொடர்ந்து வருகிறவித்தனையன்றோ; நம்மால் வந்தது ஒன்றுமில்லை காணும்" என்று எம்பெருமான் திருவுள்ளமாக; கண்ணாளா! கடல்கடைந்தாய்! என்று அவன் நெஞ்சிலேபடும்படி விளிக்கிறார். அவரவர்கள் பண்ணின கருமங்களின் பலனை அவரவர்கள் அநுபவித்தே தீரவேணுமாகில் உன்னுடைய க்ருபைக்கு இலக்குத்தான் எங்கே? என்கிறார் கண்ணாளா! என்பதனால். க்ருபையுடையவனைக் கண்ணுடையவனென்பர்களே. உன்னுடைய க்ருபைக்கு இலக்காக்க வேண்டியவர்களை லீலைக்கு விஷயமாக்கலாமோ பிரானே! என்கிறார். [கடல் கடைந்தாய்] உன் வடிவழகிலே சிறிதும் கண் செலுத்தமாட்டாதவர்களும், ப்ரயோஜநாந்தரமே கண்ணாயிருப்பவர்களும், காரியம் தலைக்கட்டினவாறே உன்னோடே எதிரம்பு கோப்பவர்களுமான தேவர்களுக்குச் சாவாமருந்து கொடுப்பதற்காகத் திருமேனி நோவக் கடல் கடைந்தவனல்லையோ நீ.

"ஆமாம்; தேவர்களுக்கு நாம் காரியம் செய்ததுண்டு; அவர்களுக்கு இச்சையாவது இருந்தது; அதுவுமில்லாதவர்களுக்கு என்னால் செய்யக் கூடியது ஒன்றுமில்லையே!" என்று எம்பெருமான் திருவுள்ளமாக, ஆகில் இவர்கள் நடுவேயிராதபடி என்னை உன் திருவடிகளிலே சேர்த்துக்கொள்ளவேணுமென்றார்; 'உனகழற்கே வரும்பரிசு' என்னும்போதே, அப்படியே செய்கிறோமென்று எம்பெருமான் தலைதுலுக்க, ஆகட்டுமாகட்டுமென்று தலையாட்டும்படியாயோ என் நிலைமையுள்ளது; இனிக்காலதாமதம் செய்யலாகாது என்கிறார். தண்ணவாது—விளம்பம் செய்யாமல்; தண்ணுத்தல்—தாமதித்தல்.

சாமாறுபணி= சரீரம் முடிந்ததாம்படி பார்த்தருள் என்கை. சரீரவியோகந்தானே மோக்ஷமென்று சொல்லுகிற மதாந்தரஸ்தர்களைப் போலன்றியே, நித்யகைங்கரியம்பண்ணி ஆனந்திப்பதே மோக்ஷமென்று உறுதிகொண்டிருக்கிற ஆழ்வார் இப்போது சரீரவியோகமாத்திரத்தைப் பண்ணிக்கொடுக்கும்படி பிரார்த்திப்பது ஏனென்னில்; இக்கொடியவர்களின் நடுவேயிருக்கிற இருப்புத் தவிர்ந்தால் போதும் என்பது இப்போதைய நினைவு போலும். .... (க)

சாமாறும்கெடுமாறும் தமருற்றார் தலைத்தலைப்பெய்து *
ஏமாறிக்கிடந்தலற்றும் இவையென்னஉலகியற்கை *
ஆமாறொன்றறியேன்நான் அரவணையாயம்மானே!
கூமாறேவிரைகண்டாய் அடியேனைக்குறிக்கொண்டே. (உ)

சாம் ஆறும்	திடீரென்று மரணமடைவதும்
கெடும் ஆறும்	பலவகைக்கஷ்டங்களையடைவதும்
	(இதுகாரணமாக)
தமர்	தாயாதிகளும்
உற்றார்	உறவினர்களும்
தலைத்தலைப் பெய்து	ஒருவர்க்கொருவர் மேல் விழுந்து
ஏமாறி கிடந்து அலற்றும் இவை உலகு இயற்கை என்ன	ஏங்கிக்கிடந்து கதறும்படியான இந்த லோகயாத்ரைகள் என்னே!

அரவு அணையாய் அம்மானே!	சேஷசாயியான ஸ்வாமியே!
நான்	அடியேன்
ஆம் ஆறு ஒன்று அறியேன்	உய்யும்வகையைச் சிறிதுமறிகின்றிலேன்;
அடியேனை	இப்படிப்பட்ட அடியேனை
குறிக்கொண்டு	திருவுள்ளம் பற்றி
கூம் ஆறு	(திருவடிவாரத்திலே) அழைத்துக்கொள்ளும்படி
விரை	விரைந்தருளவேணும்.

* * * [சாமாறுங்கேடுமோறும்.] கீழ்ப்பாட்டில் "எண்ணாராத்துயர்" என்று ஸமுதாயமாகச் சொன்னதைச் சிறிது விவரித்து, இப்படி இவர்கள் படுகிற துக்கங்களைப் போக்கியருளமாட்டாயாகில், என்னையாவது உன் திருவடிவாரத்திலே அழைத்துக்கொண்டருளவேணுமென்கிறார்.

சாமாறும்—வெகுநாளைக்கு ஜீவித்திருக்கப் போகிறதாகப் பாரித்திராநிற்கையில் இடி விழுந்தாற்போலே திடீரென்று ஸம்பவிக்கிற மரணமும். இவ்விடத்தில் "ராத்ரிர் கமிஷ்யதி பவிஷ்யதி ஸுப்ரபாதம் பாஸ்வாநுதேஷ்யதி ஹஸிஷ்யதி பங்கஜஸ்ரீ:। இத்தம் விசிந்தயதி கோசகதே த்விரேபே ஹா ஹந்த! ஹந்த! நளிநீம் கஜ உஜ்ஜஹார॥ ... ராத்ரிர் கமிஷ்யதி பவிஷ்யதி ஸுப்ரபாதம் பாஸ்வாநுதேஷ்யதி ஹஸிஷ்யதி பங்கஜஸ்ரீ:, இத்தம் விசிந்தயதி கோசகதே த்விரேபே ஹா ஹந்த! ஹந்த! நளிநீம் கஜ உஜ்ஜஹார." என்கிற ச்லோகம் காணத்தக்கது. (இதன்கருத்து.) ஒரு வண்டானது மாலைப்பொழுதில் ஒருதாமரை மலரினுள்ளே புகுந்து மதுப்பருகத்தொடங்கியது; ஸூரியன் அஸ்தமித்தவாறே மலர் மூடிக்கொண்டது; இரவெல்லாம் வண்டு அதனுள்ளேயே கிடக்கவேண்டியதாயிற்று; கிடக்கும்போது, இரவுகழிந்து பொழுதுவிடியப் போகிறதென்றும் தாமரை மலரப் போகிறதென்றும், உடனேகிளம்பிச்சென்று குடும்பங்களோடே சேர்ந்து களிக்கப்பெறலாமென்றும் பாரித்துக்கொண்டிருந்தது; இருக்கையில், ஒரு காட்டானை திடீரென்று அத்தாமரையோடையிலிறங்கி அனைத்தையும் வேர்பறியாகப்பறித்துக் கபளீகரித்திட்டது என்கை. இந்தக்கணக்கிலே மனிசர்களுக்கு நேரும் மரணத்துன்பங்களும் பலபல.

கேடுமோறும்=பிறரைக் கெடுக்கவேணுமென்று கோலியிருக்குமவர்கள் தாங்களே கெட்டுப்போகிற விதங்களும் பலபல, ஒரு கள்வன் பிறர்மனையிலே புகுந்து திருடவதாகச்சென்றான்; அங்கே அகத்துக்குடையார்கையிலே பிடியுண்டு பரிபவங்கள் பட்டுக்கிடக்கின்றான்; அதுவுமன்றியில் மற்றொரு கள்வன்

இவன்றன் வீட்டிலே புகுந்து ஏற்கனவே இவன் பலகாலமாகக் களவுகண்டு திரட்டிவைத்திருந்த பொருள்களையெல்லாம் கவர்ந்து சென்றான். இப்படியாக உலகர் கெடுமாறுகள் வாசாமகோசரம்.

[தமருற்றார் இத்யாதி.] ஆழ்வார்க்குத் தமர்களும் உற்றாரும் ஸ்ரீவைஷ்ணவர்களேயாயிருப்பர்கள். உலகர்கள் சரீரஸம்பந்தத்தைப்பற்றிச் சிலரை ஜ்ஞாதிகளென்றும் ஸம்பந்திகளென்றும் குலாவிப்போருவர்கள். அப்படிப்பட்ட உறவினர்கள் கீழ்ச்சொன்ன சாவுகளிலும் கேடுகளிலும் மேல்விழுந்து கிடந்து கூப்பாடு போடுவர்கள். ஆ! இப்படிப்பட்ட உலகியற்கை என்னே! நெடுக ஜீவிக்க மநோரதியா நிற்கையில் முடிவது, நாலுகாசு கையிலேயுண்டானவாறே 'இது நமக்கு உண்டு' என்றிருக்க அது கெட்டுப்போவது, தேஹபந்துக்களையே தமக்கு ஸகலவித பந்துவுமாக நினைத்து இவற்றுக்கு ஒன்றுவந்தவாறே 'பட்டேன்! கெட்டேன்!' என்று கூப்பிட்டு அலற்றுகிறது, ஆகிய இவையுமொரு லோகயாத்ரையே! என்று ஆச்சரியப்படுகிறாராயிற்று.

இப்படிப்பட்ட ஆழ்வாரை நோக்கி எம்பெருமான் "ஆழ்வீர்! இவ்வுலகு எக்கேடு கெட்டால் உமக்கென்ன? அவர்களைப்போல் அலற்றும்படியான நிலைமையில் உம்மை நான் வைத்திருக்கவில்லையே!; என்னைச் சொல்லியலற்றும்படியாகவன்றோ உம்மை நான் வைத்திருப்பது; தளராதே கொள்ளும்" என்றருளிச்செய்ய; ஆமாறு ஒன்றறியேன் நான் என்கிறார். இந்த ப்ரக்ருதி மண்டலத்திலே என்னை வைத்திருக்கிறாயாகையாலே இது என்னை இனி எப்பாடு படுத்துமோவென்று மிக அஞ்சுகின்றேனென்கை. இந்த ஸம்ஸாரிகளுக்கும் உன்னோடு உறவு குறையற்றிருக்கவும் ப்ரக்ருதிக்கு வசப்பட்டிருத்தலாலன்றோ உன்னையிழந்து படுகிறார்கள்; அந்த ப்ரக்ருதியில்தானே நீ என்னையும் வைத்திருக்கிறது; "ஆற்றங்கரை வாழ்மரம்போல் அஞ்சுகின்றேன்" என்றும், "காற்றத்திடைப்பட்ட கலவர் மனம்போல் ஆற்றத்துளங்காநிற்பன்" என்றும், "பாம்போடொரு கூரையிலே பயின்றாற்போல் தாங்காதுள்ளம் தள்ளும்" என்றும், "இருபாடெரி கொள்ளியினுள்ளெறும்பேபோல் உருகாநிற்கு மென்னுள்ளம்" என்றும் ஜ்ஞானிகள் கதறவேண்டும்படியான நிலத்திலே என்னை வைத்திருக்கையாலே இந்த ஸம்ஸாரிகளைப்போலே எனக்கும் என்ன ஆகுமோ! என்று அஞ்சவேண்டும்படியாயிராநின்றதே! என்றவாறு.

"ஆமாறொன்று அறியேன் நான்" என்றவிடத்தில் இன்னாருக்கு என்றில்லாமையாலே, இந்த ஸம்ஸாரிகளுக்கு ஆமாறு ஒன்று அறியேன் என்றும் உரைக்கலாம். இவர்களுக்கு இத்துயரம் நீங்கும் வழி அறிகின்றிலேன் என்கை.

அரவு அணையாய்!= திருவனந்தாழ்வானொருவனையே சென்றால்குடையாமிருந்தால் சிங்காசனமாம் இத்யாதிப்படியே ஸகலவித கைங்கரியங்களுக்கும் உரியவனாகக் கொள்ளவேணுமென்றொரு நிர்ப்பந்த முண்டோவென்று கேட்கிறபடி.

கூடமாறு—கூவுமாறு என்றபடி. என்னை நீ அழைத்துக்கொள்ளும்படியாக என்கை. இவ்விபூதியிலே இங்ஙனே கதறுகிறவன் நானொருவனே யல்லது வேறொருவருமில்லை; ஆகையாலே என்னைப்பற்றி விசேஷித்துத் திருவுள்ளம்பற்ற வேணுமென்கிறார் அடியேனைக் குறிக்கொண்டே என்று. (உ)

கொண்டாட்டும்குலம்புனைவும் தமருற்றார்விழுநிதியும் *
வண்டார்பூங்குழலாளும் மனையொழியஉயிர்மாய்தல் *
கண்டாற்றேனுலகியற்கை கடல்வண்ணா ! அடியேனை *
பண்டேபோல்கருதாது உன்னடிக்கேகூய்ப்பணிகொள்ளே. (ரு)

கொண்டாட்டும்	(புதிதாகச் சிலர் ஏறிட்டுச் செய்கிற) கொண்டாட்டமும்	உயிர் மாய்தல்	(திடீரென்று) இறந்து போவதாகிற
குலம் புனைவும்	இல்லாத குலத்தை ஏறிட்டுக்கொண்டு அஹங்கரிப்பதும்	உலகுஇயற்கை கண்டு	இந்த லோகயாத்திரையைக் கண்டு
		ஆற்றேன்	ஸஹிக்கமாட்டேன்;
தமர்	தாயாதிகளும்	கடல் வண்ணா	கடல்வண்ணனான எம்பெருமானே!
உற்றார்	உறவினரும்	அடியேனை	அடியனான என்னை
விழு நிதியும்	அளவற்ற செல்வமும்	பண்டே போல் கருதாது	இத்தனை நாளும் போல் நினைத்திராமல்
வண்டு ஆர் பூ குழலாளும்	வண்டுகள் படிந்த பூக்கள் நிறைந்த கூந்தலையுடைய மனைவியும்	உன் அடிக்கே கூய்	உன் திருவடிவாரத்திலே அழைத்துக்கொண்டு
மனை	வீடும் (ஆகிய இவை)	பணி கொள்	அடிமைகொண்டருள வேணும்.
ஒழிய	தன்னைவிட்டு நீங்க		

* * * [கொண்டாட்டும்.] இப்பாசுரத்திற்கு ஈடு முப்பத்தாறாயிரப்படி ஸ்ரீஸூக்திகள் இன்சுவையே வடிவெடுத்தவை. ஆசார்யர்களுக்கு சாஸ்த்ரார்த்த சிக்ஷணங்களிற்போலவே லோகரீதி வர்ணநங்களிலும் வல்லமை வியக்கத்தக்கதென்று அஸ்மதாசார்யரான அழகியமணவாளச்சீயர் அருளிச்செய்யும்படி.

கொண்டாட்டும் = முன்பு இன்னானென்று தெரிந்துகொள்ள முடியாதபடி அபதார்த்தமாய்க் கிடந்தவொருவன் நாலுகாசு கைப்பட்டவாறே நாலுபேர்களால் கொண்டாடப்படுவனும்; அப்படிப்பட்ட கொண்டாட்டமும்.

குலம்புனைவும் = நாலுபேர்கள் கொண்டாடத் தொடங்ினபோதே தாம் அநாதியாகவே பெரிய நற்குடிப்பிறப்புடையார் என்று காட்டிக்கொள்வதற்காக 'இன்ன திருவம்சம்' என்று ஏறிட்டுக்கொள்ளப் புகுவர்களாம்; அங்ஙனே யொரு குலத்தைத் தொடுத்துக்கொள்வதும்.

தமர்—ஏற்கனவே தாயாதிகளாயிருந்தாலுங்கூட 'இவனுடைய தாயாதியாக நம்மைச் சொல்லிக்கொள்வது நமக்கு கிறக்கேடு' என்று விட்டுத் தொலைவர்கள்; அப்படி விடப்பட்டவன்தானே சிறிது செல்வம்பெற்றவாறே தாயாதிகளல்லாதாருங்கூட 'இவனுடைய ஞாதிகளாக நம்மைச் சொல்லிக்கொள்ளுதல் நமக்கு மேன்மை' என்று நினைத்து 'இவரும் நாங்களும் ஒரே குடும்பம்' என்று சொல்லி அணுகிப்போருவர்கள்.

உற்றார்=பெண்கொடுத்தல் கொள்ளுதல் முதலிய ஸம்பந்தங்கள் செய்து கொள்வதற்குத் தகுதியற்றவன் என்று முன்னம் கைவிடப்பட்டிருந்தாலும் இப்போதாக உறவுக்கு மேல்விழாநிற்பர்களாம்.

விழுநிதியும்=நாலுகாசு சேர்ந்தவிடத்தே பின்னையும் பத்தெட்டு காசுகள் வந்துசேருமே; அப்படியே சேர்ந்துசேர்ந்து சீரிய செல்வமாகும். அந்தச் செல்வத்திற்கு ஒரு விநியோகம் வேணுமே. — (இங்கே நம்பிள்ளையீடு;—) "நினைவின்றிக்கேயிருக்கச் செய்தே சருகிலைதிரளுமாப்போலே சீரிய நிதிவந்து கைப்புகுருமே; அதுக்குப் போக்கடிகாணாமையாலே செய்வதறியாமை அத்தையிட்டு ஒரு ஸ்த்ரீயை ஸ்வீகரிக்கும்; அவள்தான் *வண்டார் பூங்குழலாளாயிற்று; இவள் செல்வினை வண்டே புஜித்துப் போமித்தனை போக்கித் தான் புஜிக்கமாட்டான். ஹோமயோக்யதை யில்லாத பருவத்திலேயாயிற்று ஸ்வீகரிப்பது."

மனையொழிய உயிர்மாய்தல் கண்டு=அவளும் தானுமாய் ஏகாந்தமாக இருக்கைக்கென்று ஒரு மாடமாளிகையைப் பல நிலமாகக் கட்டுவிப்பன்; ஆக இவை யெல்லாவற்றையும் விட்டு ஒருநாள் திடீரென்று மரணம் நேர்பட, அப்போதைய நிர்வேதங்கள் கண்டு பொறுக்கவொண்ணாதவை, இதுவரையில் ஒருவாறு இவ்விளிம்புகளை யெல்லாங் கண்டு பொறுத்திருந்தேனாகிலும் இனி ஒரு நொடிப்பொழுதும் ஆற்றகில்லேனாதலால் விரைந்து அடியேனைத் திருவடி சேர்த்துக்கொள்ளவேணுமென்றாராயிற்று. (ரு)

கொள்ளென்றுகிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம்நெருப்பாக *
கொள்ளென்றுதமம்மூடும் இவையென்னஉலகியற்கை ? *
வள்ளலே ! மணிவண்ணா ! உனகழற்கேவரும்பரிசு *
வள்ளல்செய்தடியேனை உனதருளால்வாங்காயே. (சா)

கொள் என்று கிளர்ந்து எழுந்த	'என்னைக்கொள் என்னைக்கொள்' என்று மேன்மேலும் பெருகித் தோற்றுகிற	தமம் மூடும் இவை உலகு இயற்கை என்ன	தமோ குணம் மேலிட்டுச் செல்லுகின்ற இந்த லோகஸ்வபாவமிருந்தபடி என்னே!.
பெரு செல்வம்	பெரிய செல்வமானது	வள்ளலே	மஹோதாரனே!
		மணி வண்ணா	நீலமணிவண்ணனே!
நெருப்பு ஆக	நெருப்புப்போல் ஸமூலநாசம் பண்ணுகிற்கச் செய்தேயும்	உன கழற்கே வரும் பரிசு	உன் திருவடிவாரத்திலேயே வந்து சேரும்படி
		அடியேனை	அடியேன்விஷயத்தில்
	(அதில் ஆசை யொழியாமல்)	வள்ளல்செய்து	ஔதார்யத்தைக் காட்டி
		உனது அருளால்	உனது பரம க்ருபையாலே
கொள் என்று	அந்தச் செல்வத்தையே மேன்மேலும் கொள்ளும் படியாக	வாங்காய்	கைக்கொண்டருள வேணும்.

* * * [கொள்ளென்று கிளர்ந்து.] ஐச்வர்யமானது அநர்த்தஹேது என்பதைக் கட்கூடாகக் காணுநிற்கச்செய்தேயும், பின்னையும் மேல்விழுந்து அதிலே நசை பண்ணிப் போருகிற லோகயாத்ரையைக் காணப்போகிறதில்லையே! என்கிறார். நெருப்புக்கு ஆச்ரயாசம் என்று பெயர்; தனக்குப் பற்றுக்கோடான இடத்தையே கபளீகரிப்பது நெருப்பின் இயல்வு; அதுபோலவே செல்வமும் தான் பற்றுகிற இடத்தை வேரோடே அழிக்கவல்லது என்பதைக் கண்ணாரக் காணுநிற்கச் செய்தேயும்—என்பது முதலடியின் கருத்து. செல்வம் விஞ்சி ஜீவிக்கப் பெறுமவர்களை அச்செல்வமே காரணமாகப் பொறாமையாளர்கள் சித்திரவதம் செய்வது உலகவியற்கையாதலால் ஆழ்வார் இங்ஙனே யருளிச்செய்தது மிகப் பொருந்தும்.

நெருப்பாக என்றவிடத்தில் உம்மை தொக்கியிருப்பதாகக் கொள்ள வேணும்.

கொள்ளென்று தமமூடும்="பகல்கண்ட குழியிலே இராவிழுவாரைப் போலே" என்று ஒரு த்ருஷ்டாந்தம் அடிக்கடி ஆசாரியர்கள் ஸாதிப்பதுண்டு; அதாவது, ஓரிடத்தில் ஒரு பெரிய பள்ளமிருக்கும்; அதனைப் பகலில் நன்றாகக் கண்டிருக்கச் செய்தேயும் இரவில் இருளிலே செல்லும்போது ஸஹஸா அதிலே விழுந்து படுவர்களாம்; அப்படியே செல்வம் விநாசஹேது என்பதை ஸ்பஷ்டமாகக் காணுநிற்கச்செய்தேயும் மீண்டும் அதனையே கொள்ளும்படியாக இப்படியும் ஒரு தமோகுணம்வந்து மூடுமோவென்று ஆழ்வார் வியக்கிறார். தமஸ் என்னும் வடசொல் தமமெனத்திரிந்தது.

வள்ளலே மணிவண்ணா=வள்ளல் என்றால் தாராளமாகக்கொடுப்பவன் என்று பொருள்; எதைக்கொடுப்பவனென்னில், மணிவண்ணா! என்கிற பதச்சேர்த்தியினால் தனது திருமேனியையே முற்றூட்டாக அநுபவிக்கக் கொடுப்பவனென்பது பெறப்படும். "மாணிக்கப் பண்டாரத்தையிறே ஔதார்யம் பண்ணிற்று" என்பது நம்பிள்ளையீடு. ... ... (௪)

வாங்குநீர்மலருலகில் நிற்பனவும்திரிவனவும் *
ஆங்குயிர்கள்பிறப்பிறப்புப் பிணிமூப்பால்தகர்ப்புண்ணும் *
ஈங்கிதன்மேல்வெந்நரகம் இவையென்னஉலகியற்கை ? *
வாங்கெனைநீமணிவண்ணா ! அடியேனைமறுக்கேலே. (௫)

வாங்கும்	உலகங்களை யெல்லாம் பிறகு தன் பக்கலிலே ஸம்ஹரித்துக்கொள்ள வல்லதான
நீர்	நீரிலே
மலர்	மலர்ந்த
உலகில்	பூமியின்கண்
நிற்பனவும்	ஸ்தாவரங்களும்

திரிவனவும்	ஜங்கமங்களுமான
ஆங்கு	அவ்வவ்விடங்களிலுள்ள
உயிர்கள்	பிராணிகள்
ஈங்கு	இப்புவியில்
பிறப்பு இறப்பு பிணி மூப்பால்	பிறப்பது இறப்பது வியாதி கொண்டிருப்பது கிழத்தனமடைவது ஆகிய இவற்றாலே

தகர்ப்புண்ணும்	வருந்திக்கிடக்கும்;
இதன் மேல்	இறந்தொழிந்தபின்போவென்னில்
வெம் நரகம்	கொடிய நரக வேதனையாம்;
இவை என்ன உலகு இயற்கை !—;	
மணி வண்ணா	நீலமணிவண்ணனே !

நீ	நீ
எனை	இத்துயரம் பொறுக்கமாட்டாத என்னை
வாங்கு	அங்கீகரித்தருளவேணும்
அடியேனை	உன்னடியனான என்னை
மறுக்கேல்	கலங்கப் பண்ணவேண்டா.

* * * [வாங்குநீர் மலருலகில்.] பிறப்பது மிறப்பதுமாய் நோவுபட்டுத்திரிகிற இந்த ஸம்ஸாரிகள்நடுவில்நின்றும், இத்துன்பம் நடையாடாத தேசவிசேஷத்திலே யென்னையழைத்துக் கொண்டருளவேணுமென்கிறார்.

வாங்கு நீர்மலருலகில் என்பதற்கு இரண்டுபடியாகப் பொருள் கூறுவர்; (வாங்குதல் சூழ்தலாய்; நீர்வாங்கு—கடல்சூழ்ந்த, மலர்—விஸ்தீர்ணமான, உலகில், என்று ஒரு பொருள். மற்றொருபொருளாவது, காரியப்பொருள்களுக்கெல்லாம் காரணப்பொருளிலேயே லயமாகையாலே, *அப ஏவ ஸஸர்ஜாதௌ—அப ஏவ ஸஸர்ஜாதௌ * என்கிறபடியே முழுமுதற்காரணமான நீரிலேயே காரியப்பொருள்களெல்லாம் லயமடையவேண்டுகையாலும், மீண்டும் அதிலிருந்தே உத்பத்தியாகவேண்டுகையாலும், வாங்கும் நீர்—காரியப்பொருள்களையெல்லாம் தன்னிடத்தே சுருக்கிக்கொள்ளுமதான நீரில்நின்று, மலர்—மறுபடியும் உத்பவித்த, உலகில்; என்பதாம்.

இப்படிப்பட்ட வுலகத்திலே ஸ்தாவரஜங்கமாத்மகங்களான ஸகலப்ராணிகளும் அநுபவிக்கும் துயரங்கள் கண்கொண்டுகாணவொண்ணாதவை; இதற்கு மேல் கும்பீபாகம் முதலிய நரகங்களில் படும் யாதனைகளும் அளவிலாதவை; "நாமடித்தென்னையனேகதண்டம் செய்வதா நிற்பர் நமன்தமர்கள்" என்றும், "தண்ணனவில்லை நமன்தமர்கள் சாலக்கொடுமைகள் செய்யாநிற்பர்" என்றும் "நமன்தமர்பற்றி நலிந்திட்டு இந்த வூனே புகேயென்று மோதும்போது" என்றும். "நமன்தமர்பற்றி யெற்றிவைத்து எரியெழுகின்ற செம்பினாலியன்ற பாவையைப் பாவீதழுவென மொழிவதற்கஞ்சி" என்றும் மஹான்கள் கூறுவர்கள். இவையெல்லாம் படும்படியாயோ என்னை நீ இங்கு வைத்திருக்கின்றது? அந்தோ! இப்படியென்னைக் கலங்கப்பண்ணாதே சடக்கெனத்திருவடி சேர்த்துக் கொள்ளவேணும். (௫)

மறுக்கிவல்வலைப்படுத்திக் குமைத்திட்டுக்கொன்றுண்பர் *
அறப்பொருளையறிந்தோரார் இவையென்னஉலகியற்கை ? *
வெறித்துளவமுடியானே ! வினையேனைஉனக்கடிமை *
அறக்கொண்டாய் * இனிஎன்னாரமுதே ! கூயருளாயே. (௬)

மறுக்கி	பயமூட்டி
வல் வலை படுத்தி	தங்களது கொடிய வலையிலே சிக்கிக்கொள்ளும்படி செய்து
குமைத்திட்டு கொன்று	சித்ரவதம் பண்ணி
உண்பர்	தங்கள் வயிற்றை வளர்ப்பர்கள்;
அறம்பொருளை அறிந்து ஓரார்	தருமதத்துவத்தையறிந்து கவனிப்பாரில்லை;

இவை என்ன உலகு இயற்கை!—;

வெறி துளவம் முடியானே	பரிமளம்மிக்க திருத்துழாயைத் திருமுடியிலணிந்துள்ளவனே
(இப்படிப்பட்ட ஒப்பனையழகைக்காட்டி)	
வினையேனை	பாவியான என்னை
உனக்கு அற	உன் விஷயத்திலேயே அற்றுத்தீரும்படி
அடிமை கொண்டாய்	ஏற்கனவே அடிமை கொண்டிருப்பவனே!
என் ஆர் அமுதே	எனக்குப் பரிபூர்ணமான அமுதமே!
இனி	உடனே
கூய் அருளாய்	அழைத்துக்கொண்டருளவேணும்.

* * * [மறுக்கிவல்வலைப்படுத்தி] பரஹிம்ஸையே போதுபோக்கான இந்த லோகயாத்ரையை நான் காணாதபடி என்னையழைத்துக் கொண்டருளவேணுமென்கிறார். ஆழ்வார் திருப்புளியாழ்வாரடியிலே திருக்கண்களை மூடிக்கொண்டு எழுந்தருளியிராநிற்கச்செய்தேயும் லோகயாத்ரை உள்ளது உள்ளபடியுணர்ந்து பேசுகிறவிது என்னே! என்று வியக்கவேண்டும்படியிராநின்றது.

கையிலே நாலுகாசு உள்ளவர்களைக் கண்டால் அதைப் பறிக்கவெண்ணிச் சில உபாயங்கள் செய்வர்கள்; 'உன்னை இன்னாரும் இன்னாருமாக இன்னபடிச் செய்யக் கோலியிருக்கிறார்கள்' என்று சில பொய்களைச் சொல்லி அச்சமுறுத்தித் தங்களிடத்திலே நம்பிக்கையுண்டாய்ப் பொருள்களையெல்லாம் தங்களிடத்திலேயே கொண்டுவைக்கும்படியாகச் செய்து இப்படியாக வலையிலே அகப்படுத்திக்கொண்டு மரணாந்தமான ஹிம்ஸைகளையும் பண்ணி வயிறுவளர்ப்பர்கள் ஸம்ஸாரிகள்; தேஹத்திற்காட்டில் வேறுபட்டதான ஆத்மவஸ்து ஒன்று இருக்கின்றதே; அது படும்பாடு என்னாகுமோ! என்று சிறிதும் ஆராய்வாரில்லை; இப்படி ஒரு லோகயாத்ரையுண்டாயிருப்பதே! பிரானே, இக்கொடிய ஸம்ஸாரிகள் நடுவேயிருக்கிற வென்னை உன்னுடைய பரமபோக்யதையைக்காட்டி ஏற்கனவே அடிமை கொண்டிருக்கிறாய்; இருந்தாலும் இந்நிலத்திலேயே இன்னமும் வைத்திடுவாயாகில் என்னை நீ அடிமைகொண்டதெல்லாம் பழுதாயொழியுமத்தனை; சப்தாதிவிஷயப்ரவணராயிருக்கிற இவர்களிலே நானுமொருத்தனாய்த் தொலைந்து போவேனத்தனை; அங்ஙனம் போகாதபடி விரைந்து திருவடி சேர்த்துக்கொண்டருளவேணுமென்றாராயிற்று. (௬)

ஆயேயிவ்வுலகத்து நிற்பனவும்திரிவனவும்*
நீயேமற்றொருபொருளும் இன்றிநீநின்றமையால்*
நோயேமூப்பிறப்பிறப்புப் பிணியேயென்றிவையொழிய*
கூயேகொள்ளடியேனைக் கொடுவுலகம்காட்டேலே. (௭)

221.—3. முழுதுமாய் எங்கணுமொழிவற அருவாகி நின்று தோய்விலனும் ஸர்வவ்யாபகன் தீர்ந்தவடியார்களைத் தாளிணைக்கீழ்க்கொள்ளும் தன்படிக்கும்.

[மூன்றாம்பத்தின் அர்த்தவிசேஷங்களைச் சுருக்கியருளிச்செய்தல்]

மூன்றாம்பத்தின் ஸாரமான கருத்தாவது:— கார்ய வர்க்கங்களான ஸகல சேதநாசேதநங்களையும் வியாபித்து அவற்றிலுள்ள தோஷங்கள் அணுவளவும் தன்னை ஸ்பர்சிக்கப் பெறாதபடி ஸர்வவ்யாபகனாயிருக்கின்ற எம்பெருமான், கீழ்ப்பத்தில் இருவருடையவும் ஸ்வரூபத்திற்குத் தகுதியாக ஆழ்வார் நிஷ்கர்ஷித்த மோக்ஷத்திற்குப் பலனான தன்னுடைய திவ்யமங்கள விக்ரஹாநுபவத்தை இவர்தாம் பெற்றாராம்படி செய்தவளவில்,இவரும் அவ்வநுபவத்தைப் பெற்றுத்தரித்து, அதனாலுண்டான உவப்பின் மிகுதியாலே எல்லாவடிமைகளும் செய்ய வேண்டும்படியான ஆவல் கிளர்ந்தவராய், அந்த ஆவலுக்குத் தகுதியாக அப்பெருமான் காட்டிக்கொடுத்த தன்னுடைய விபூதி விஸ்தாரத்தைப்பேசி அத்தாலே கரைபுரண்ட ப்ரேமமுடையராய், அந்த ப்ரேமம் அவ்வெம்பெருமானளவிலே அடங்கிநில்லாமல் எல்லையான பாகவத சேஷத்வத்தளவும்சென்று, அந்த பாகவதர்களுக்கு நிரூபகம் பகவானுடைய வைலக்ஷண்யமாகையாலே அத்தை அநுஸந்திக்கவே ஒரு கரணத்தினுடைய செயலை மற்றொரு கரணம் ஆசைப்படவேண்டும்படியான பெருவிடாய் படைத்தவராய், எம்பெருமானையன்றி மற்று எவரையும் துதிக்கமாட்டாத தம்முடைய வைலக்ஷண்யத்தை வெளியிட்டவராய், எம்பெருமானை யனுபவிப்பதற்கு ஒருவகையான இடையூறுமின்றிக்கே அபரிமிதமான ஆனந்தத்தை யடைந்தவராய், ஸம்ஸாரிகள் எம்பெருமானுடைய பரத்வத்தைக்கண்டு அஞ்சிப் பின்வாங்காமல் மேல்விழுந்து ஆச்ரயிக்கும்படி அர்ச்சாவதார ஸௌலப்யத்தை அவர்களுக்கு உபதேசித்து, அர்ச்சிராதிகதியாலே திருநாட்டைப் பெறுவிக்குமவனை எம்பெருமானையொழியப் பிறருடைய ஸ்தோத்ரத்திலே கைவைப்பது பயனற்றதென்றும், எம்பெருமான் விஷயத்திலே வாக்கு ஸபலமாம்படி அடிமை செய்வதே உரியதென்றும் உபதேசித்து அவர்களைத் தம்மைப்போலே கைங்கர்யபராம்படி செய்தருளுகிறாரென்பது தேர்ந்த கருத்து.

இனி மூலத்தின்மேல்ப்பாநள் விவரிக்கப்படுகிறது.

இப்பத்தில் ஆழ்வார் முக்கியமாகப்பேசின பகவத்குணம் வ்யாபகத்வம். "முழுதுமாயெங்கணுமொழிவற அருவாகிநின்று தோய்விலனும்" என்னுமளவும் வ்யாபகத்வத்தில் நோக்கான சந்தைகளை அடுக்கியிருக்கிறார். * முழுதுமாய் முழுதியன்றாய் * ஏழ்ச்சிக்கேடின்றியெங்கணும் நிறைந்தவெந்தாய் * எஞ்ஞான்றுமெங்குமொழிவற நிறைந்துநின்ற * அளவுடை யைம்புலன்களறியா வகையாலருவாகி நிற்கும் * யாவையும் யவருந்தானாய் அவரவர் சமயந்தோறும் தோய்விலன் *

நீதந்த மாமாயப் புணர்வினைப் பிறப்பழுந்தி

என்கிற பாசுரங்கள் இங்கு விவக்ஷிதங்கள். முதல் மூன்று சந்தைகளினால் ஸகல சேதநாசேதநங்களையும் வியாபித்திருக்கும்படி சொல்லுகிறது. *யாவையும் யவருந்தானாய் அவரவர் சமயந்தோறும் தோய்விலன் என்றதன் கருத்தாவது-ஞான ஸ்வரூபமாக இருக்கின்ற எம்பெருமான் சேதநாசேதநங்களில் அந்தராத்மாவாகத் தான் பிரவேசித்திருந்தும் அந்தச் சேதநர்கட்கு உரியனவான சுகம் துக்கம் முதலிய நிலைமைகளில் அவர்களைப்போலத் தனக்கு யாதொரு கலப்புமில்லாதவனென்பதாம். உடலுக்கு உள்ளேயிருக்கிற உயிர்கட்கு அந்த உடலைச்சார்ந்த இளமை நரைதிரை முதலிய வேறுபாடுகள் தட்டுவதில்லையென்ற எண்ணம் மனத்திற்படுமாயின், எப்பெருமான் சேதநாசேதநங்களோடு கலந்திருந்தாலும் அவற்றின் சுகம் துக்கம் முதலிய நிலைமைகள் அவ்வெம்பெருமானுக்குத் தட்டாவென்பதும் நன்கு விளங்குமென்பது பாசுரத்தின் பூர்த்தியான பொருள். ஆக, தேச காலவஸ்துக்களால் பரிச்சேதிக்கவொண்ணாதபடி ஸகல சேதநாசேதநங்களையும் வியாபித்து அவற்றிலுள்ள தோஷங்கள் தட்டப்பெறாமையினாலே வியாபகனை ஸர்வேச்வரன்—என்றதாயிற்று. ''ஸர்வவ்யாபகன்'' என்கிற எழுவாய்ப்பதம் மேலே '' கண்டுகொள் என்னும் என்கிறவிடத்திலே அந்வயிக்கும். ''ஸர்வவ்யாபகன், கண்டுகொள்என்று காட்டிக்கொடுக்கிற மோக்ஷத்திற்கு'' என்று அந்வயப்போக்கு அறிக.

எம்பெருமான் ஆழ்வார்க்கு எவ்விதமாக மோக்ஷத்தைக் காட்டிக் கொடுத்தானென்னில்; தீர்ந்தவடியார்களைத் தாளிணைக்கீழ்க்கொள்ளும் தன்படிக்கு ஸத்ருசமாகவும் ஆழ்வாருடைய காதலுக்கு ஸத்ருசமாகவும் காட்டிக் கொடுத்தானென்கிறது மேல்.

* தீர்ந்தவடியவர்தம்மைத் திருத்திப் பணிகொள்ளவல்ல என்றும், *சன்மசன்மாந்தரங்காத்து அடியார்களைக்கொண்டுபோய், தன்மைபெறுத்தித் தன்தாளிணைக்கீழ்க்கொள்ளுமப்பன்* என்றும் சொல்லுகிறபடியே, உபாயோபேயங்களிரண்டும் எம்பெருமானேயென்று தீர்ந்தவர்களான [திடமான உறுதி கொண்டவர்களான] அடியவர்களை இனி ஜன்மபரம்பரைகளிலே புகாதபடி ரக்ஷித்து அர்ச்சிராதி மார்க்கத்தாலே திருநாட்டிலே கொண்டுபோய்வைத்து ஸ்வஸ்வரூப ப்ராப்தியைப் பண்ணிக்கொடுத்துத் தன் திருவடிகளின் கீழேயிட்டுக் கொள்ளும் தன்னுடைய ஔதார்யத்திற்குத் தகுதியாகவும்;

[1. நீதந்த 2. மாமாயப் 3. புணர்வினைப் 4. பிறப்பழுந்தி 5. அலமருகின்றேன் 6. வேரற 7. அரிந்து 8. எங்நாள் 9. எங்குவந்து 10. தலைப்பெய்வனேன்று 11. கழித்துப்புகும் தம் காதலுக்கும் ஸத்ருசமாக] பிரகிருதி ஸம்பந்தம் தொலையவேணுமென்பதற்காகவும் மோக்ஷப்பெறவேணுமென்பதற்காகவும் ஆழ்வார் தாம் வெளியிட்ட விருப்பத்தைப்பற்றின சந்தைகள் இங்குக் காட்டப்படு

அலமருகின்றேன்வேரறவரிந்து எங்நாளெங்குவந்து தலைப்பெய்வனேன்று
கழித்துப்புகும் தங்காதலுக்கும் ஸத்ருசமாகக் கண்டுகோள்ளேன்னும்

கின்றன. 1. *அந்நாள் நீதந்த ஆக்கையின் வழியுழல்வேன்* [ஸ்ருஷ்டி காலத்திலே உன்னைப்பெறுகைக்கு உடலாக நீதந்த சரீரத்தைக் கொண்டு உன்னைப்பெறப்பாராதே நான் அவ்வுடல் இழுத்துக்கொண்டுபோகும் வழியிலேயே போகின்றேனே!] என்றும், 2. *பன்மாமாயப் பல் பிறவியிற் படிகின்றயான் *[பலவகைப்பட்டு ப்ரக்ருதியின் காரியமான தேவாதி தேஹங்களிலே மண்டிப்போருகின்றேனே!] என்றும், 3. *பொல்லாவாக்கையின் புணர்வினை * [ஹேயமான சரீரத்துக்கு அடியாய் ஒன்றோடொன்று பிணைந்திருக்கிற கருமம் இருந்தபடி என்!] என்றும், 4. *வினையியல் பிறப்பழுந்தி* [மீண்டும் பாபத்திலே கொண்டுபோய் மூட்டக்கடவதான ஜன்மபரம்பரைகளிலே அழுந்திக் கிடக்கும்படியே!] என்றும், 5. *கொடுவினைத் தூற்றுள் நின்று பாவியேன் பலகாலம் வழிதிகைத்து அலமருகின்றேன்* [என்னால் அடியறுக்கவும் அடிகாணவுமொண்ணாமல், புகுரவழி தெரியுமதொழியப் புறப்படவழி தெரியாத பாபமாகிற புதரிலே அகப்பட்டுநின்று உன்னையடைவதற்கீடான வழிகாணாதே கதறுகின்றேன்] என்றும்; 6. *வினைகளை வேரறப்பாய்ந்து* 7. *தொன்மாவல்வினைத் தொடர்களை முதலரிந்து நின்மாதாள் சேர்ந்து நிற்பது எஞ்ஞான்று கொலோ* 8. *எந்நாள் யானுன்னை யினிவந்து கூடுவனே* 9 *யானுன்னை எங்குவந்தணுகிற்பனே* 10. *உலகமெல்லாம் தாவியவம்மானை எங்கினித் தலைப்பெய்வனே* என்றுமுண்டான பாசுரங்களாலே நான் உன்னைக்கிட்டுவதொருநாள் அறுதியிட்டுத்தரவேணுமென்றும், நான் உன்னை எங்கேவந்து கிட்டக்கடவேனென்றும் இனிக்கிட்டுகையென்று ஒரு பொருளுண்டோவென்றும் சரீரஸம்பந்தத்துக்கு நொந்து, அதிலுண்டான அருசியோடே, 11. *காயங்கழித்து அவன் தாளிணைக்கீழ்ப்புகுங்காதலன் *என்று, 'பகவத்குணாநுபவமே யாத்திரையாகப் போதைப் போக்கி இவ்வுடலைவிட்டு அவன் திருவடிகளின் கீழே புகவேணுமென்கிற காதலையுடையேன்' என்று சொல்லிக்கொண்ட ஆழ்வாருடைய ஆசைக்குத் தகுதியாகவும்;

[கண்டுகோள் என்னும் ஊனமில்மோக்ஷபலமான]

* வானவர் நாட்டையும் நீ கண்டுகொள்ளென்று வீடுந்தரும் நின்று நின்றே * என்கிறபடியே எம்பெருமான் மோக்ஷத்தைக்காட்டிக் கொடுக்கிறுனயிற்று. அதுதான் கைவல்ய மோக்ஷமோவென்னில், அன்று; பரிபூர்ணாநந்தமயமான மோக்ஷம் என்பதற்காக ஊனமில்மோக்ஷமென்னப்பட்டது. ஆத்மாவையநுபவித்தல் மாத்திரமான கைவல்யமென்னும் மோக்ஷத்திலும் வேறுபாடு விளங்க, பரமாத்மாவான எம்பெருமானையே பரிபூர்ணமாக அநுபவித்தலென்னும் பரமபுருஷார்த்தமாகிற மோக்ஷத்தை ஆழ்வார் ஊனமில்மோக்கம் என்றார். அப்படிப்பட்ட மோக்ஷத்தையாயிற்று எம்பெருமான் காட்டிக்கொடுத்தது.

ஊனமில்மோக்ஷபலமான முடிச்சோதியிலநுபவத்தாலே நித்யவஸ்து நீடு பெற்று அவச்சேதமற்றவடிமை செய்யவேண்டும்படி

அந்த மோக்ஷத்திற்குப்பலன் பகவதநுபவ கைங்கர்யங்களே யாதலால் * முடிச்சோதியாய் * என்கிற திருவாய்மொழியிலே அவனது வடிவழகையும் ஆபரணச் சேர்த்தியையும் அநுபவித்தாரென்பதைச் சொல்லுகிறது மோக்ஷபலமான முடிச்சோதியிலனுபவத்தாலே என்று.

[நித்யவஸ்து நீடுபெற்று.]

இவ்வாக்கியம் * முந்நீர்ஞாலம் படைத்த * என்கிற இரண்டாம் பதிகத்தின் ப்ரமேயத்தைத் தெரிவிப்பது. கீழ்முடிச்சோதியில் அநுபவிக்கத்தொடங்கின விஷயத்தைப் பரிச்சேதித்து அநுபவிக்கப் போகாமையாலே 'ப்ராக்ருதி ஸம்பந்தம் காரணமாக நம்முடைய கரணங்கள் ஸங்குசிதங்களாயிருக்கையாலன்றோ பகவத்விஷயத்தை நாம் பரிபூர்ணமாக அநுபவிக்க முடியாமல் துவள்கிறோம்' என்றுகொண்டு ஆழ்வார் வருத்தமுற்றிருக்க, எம்பெருமான், ஆழ்வீர்! நீர் ஏன் துவள்கின்றீர்? நம்மைப்பூர்ணமாக அநுபவிக்க முடியாமைக்குக் காரணம் கரணஸங்கோசமென்று நீர்நினைக்கின்றீர்போலும்; அங்ஙனம் நினைக்கவேண்டா; விஷயம் அளவிடமுடியாததாகையாலே பரிபூர்ணாநுபவம் செய்யமுடியவில்லையே யென்கிற தளர்ச்சி உமக்குப்போலவே நித்யமுக்தர்களுக்குமுண்டுகாணும்' என்று அறிவித்து ஆழ்வாருடைய வருத்தத்தைமாற்ற, அதனால் ஒருவாறு மகிழ்வுற்ற ஆழ்வார் *நிலைப்பெற்றென்னெஞ்சம், பெற்றது நீடுயிரே * என்றார். இங்கு, "உயிர்நீடுபெற்றது" என்று அந்வயம். உயிர்... ஆத்மா, நீடுபெற்றது—நித்யத்வத்தைப் பெற்றதாயிற்று என்றுபொருள். அதுதோன்றவே "நித்யவஸ்து நீடுபெற்று" என்று இங்கு மூலமருளிச்செய்தது. ஏற்கனவே நித்யமாயிருக்கின்ற ஆத்மவஸ்து நித்யத்வம் பெறுகையாவது-தரிப்புப்பெறுகையேயாம்.

[அவச்சேதமற்ற அடிமை செய்யவேண்டும்படி.]

இவ்வாக்கியம் *ஒழிவில்கால மெல்லாம்* என்கிற மூன்றும் பதிகத்தின் ப்ரமேயத்தைத் தெரிவிப்பது. கீழ்ப்பதிகத்தில் *பெற்றது நீடுயிரே* என்று சொல்லிவிட்டாலும் கைங்கரியம் பண்ணியே அது பலிக்கவேண்டுகையாலே *ஒழிவில் காலமெல்லாம் உடனாய்மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டும் நாம் *என்று ஸகலதேச ஸகலகால ஸகல அவஸ்தைகளிலும் ஸகலவித கைங்கரியங்களும் செய்யவேண்டும்படியான அபிநிவேசம் மிக்கது. (அவச்சேதமாவது வரையறை; இன்னஇடத்திலே இன்னபோதிலே இன்னநிலைமையிலே இன்னவிதமான கைங்கரியம் செய்வது என்கிற வரையறையின்றிக்கே என்றபடி.) அப்படிப்பட்ட அபிநிவேசத்தாலே;

ஸர்வாத்மபாவத்தைப் புகழ்ந்து, சொல்லிப்பாடி யேத்திப்பிதற்றி யெழுந்தும் பறந்தும் துள்ளிக் குனித்துத் தடுகுட்டக்கும்பிடு நட்டமிட்டுச் சிரிக்கக்குழைந்து நையும் ப்ரீதியுகளத் தம்மடியாரேன்ன உடன்கூடும் ஸாத்யம்வளர,

---

[ஸர்வாத்மபாவத்தைப் புகழ்ந்து]

கீழ் *ஒழிவில் காலத்தில் ஸகலவித கைங்கர்யங்களையும் செய்வதற்காகக் கொண்ட பாரிப்புக்கீடாக எம்பெருமான் எல்லாப்பொருள்களிலும் பிரவேசித்து எங்கும் நிற்கின்ற நிலையைக்காட்டிக் கொடுக்கக் கண்ட ஆழ்வார் * புகழுநல்லொருவனென்கோ பொருவில் சீர்ப்பூமியென்கோ, குன்றங்களனைத்துமென்கோ, சாதிமாணிக்கமென்கோ சவிகொள் பொன்முத்தமென்கோ, நளிர்மதிச்சடையனென்கோ நான்முகக்கடவுளென்கோ * என்று அவனுடைய ஸர்வாத்மத்வத்தைப்பேசி மகிழ்ந்தாராயிற்று.

[சொல்லிப்பாடியேத்திப் பிதற்றியெழுந்தும் பறந்தும் துள்ளிக்குனித்துத் தடுகுட்டக்கும்பிடுநட்டமிட்டுச் சிரிக்கக் குழைந்துநையும் ப்ரீதி உகள.]

இவ்வாக்கியம் * மொய்ம்மாம்பூம் பொழிலென்னும் பதிகத்தின் ப்ரமேயத்தைப் பேசுகிறது. * எம்மானைச் சொல்லிப்பாடி * என்றும் * பண்கள் தலைக்கொள்ளப்பாடி * என்றும் * முனிவின்றியேத்தி * என்றும் பேர்பல சொல்லிப்பிதற்றி * என்றும் * எழுந்தும் பறந்தும் துள்ளாதார் * என்றும் *ஏத்திக்குனிப்பார்* என்றும் * தடுகுட்டமாய் * என்றும் * கும்பிடுநட்டமிட்டாடி * என்றும் * உலோகர்சிரிக்கநின்றாடி * என்றும் * நெஞ்சங்குழைந்து நையாதே * என்றும் அருளிச்செய்தபடியே வாசிககாயிகமாநஸவ்யாபாரங்களாலே களிக்கும்படியாக, * புகழுநல்லொருவனிலுண்டான ப்ரீதி தலைமண்டையிட்டுச்சென்றது.

[தம்மடியாரேன்ன வுடன்கூடும்ஸாத்யம்வளர.]

* மொய்ம்மாம்பூம் பொழிலுக்கு அடுத்தபடி * செய்யதாமரைக்கண்ணனுடைய ப்ரமேயம் அருளிச்செய்ய வேண்டியிருந்தும் அதை நிறுத்திவைத்து மேலே உபதேச பரங்களான சந்தைகளிலே சேர்க்கிறார்.) இப்போது பயிலுஞ்சுடரொளியின் ப்ரமேயமருளிச் செய்யப்படுகிறது. கீழ் இரண்டாம் பத்தில் *அடியார்கள் குழாங்களையுடன் கூடுவதென்றுகொலோ என்று ப்ரார்த்தித்த பேறானது * தம்மடியாரடியார் தமக்கடியாரடியார்தம் அடியாரடியோங்களே *. என்று, 'ததிய சேஷத்வத்தின் எல்லையிலே நிற்கிறவர்கள் நமக்கு உத்தேச்யர்' என்னும்படி வளர்ந்து சென்றதாயிற்று. (உடன்கூடும் ஸாத்யம்; தம்மடியாரென்ன வளர—என்று அந்வயம்.)

பைகோள்பாம்புபோலே இந்த்ரியவ்ருத்தி நியமமறப் பாடவந்தகவியன்றிக்கே படைத்தான் ச்லோகக்ருத்தாய், குறைமுட்டுப் பரிவிடர்துயர் துன்பமல்லல் துக்கம் தளர்வு கேடுகளின்றி அம்ருதாநந்த மக்நரானவர்,

---

[பைகோள்பாம்புபோலே இந்த்ரிய வ்ருத்தி நியமமற.]

இவ்வாக்கியம் *முடியானே *என்கிற பதிகத்தின் ப்ரமேயத்தைத் தெரிவிக்கிறது. ஒரு இந்த்ரியத்தினுடைய வ்ருத்தியை மற்றோரிந்திரியம் ஆசைப்படும்படி நேர்ந்தது இப்பதிகத்திலேயாகையாலும், *பைகொள்பாம்பேறியுறை பரனே *என்றருளிச்செய்ததும் இப்பதிகத்திலேயாகையாலும் "பைகொள் பாம்புபோலே இந்த்ரிய வ்ருத்தி நியமமற" எனப்பட்டது. சக்ஷுச்ச்ரவா: என்று பேர் பெற்றிருக்கின்ற திருவனந்தாழ்வான் ஒரு கரணத்தாலே மற்றொரு கரணத்தின் காரியத்தையும் கொள்ளுமாபோலே வாக்கின்செயலை மனமும், கையின் செயலை வாக்கும், கண்ணின் செயலைக் கையும், காதின் செயலைக்கண்ணும் ஆசைப்படும்படியாகப் பெருவிடாயையுடையரானார்.

[பாடவந்த கவியன்றிக்கே படைத்தான் ச்லோகக்ருத்தாய்.]

இது *சொன்னால் விரோதத்தின் ப்ரமேயத்தைச் சொல்லுகிறது. (சொன்னால் விரோதத்தில் ஆழ்வார் தம்முடைய படியைப்பேசுதலும் பரோபதேசம் பண்ணுதலுமாக இரண்டுண்டு; பரோபதேசப் பகுதியைமேலே உபதேசச் சந்தையிலே சேர்க்கிறார்; தம் படியைப்பேசும் பகுதியைக்கொள்கிறாரிப்போது.) *வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவியேனல்லேன்* என்றபாசுரத்தையுட்கொண்டு "பாடவந்த கவியன்றிக்கே" என்றது. *ஒன்றியொன்றி யுலகம்படைத்தான் கவியாயினேற்கு*என்ற பாசுரத்தையும் *அஹம்ச்லோகக்ருதஹம்ச்லோகக்ருதஹம்ச்லோகக்ருத் என்கிற தைத்திரீயோபநிஷத்வாக்யத்தையும் உட்கொண்டு "படைத்தான் ச்லோகக்ருத்தாய்" எனப்பட்டது. நரஸ்துதி பண்ணாதே ஸர்வேச்வரன் விஷயத்திலே கவிபாடுமவன் நான் என்று அருளிச்செய்தமை சொல்லிற்றாயிற்று.

[குறைமுட்டுப் பரிவிடர் துயர்துன்ப மல்லல் துக்கம் தளர்வு கேடுகளின்றி அம்ருதாநந்த மக்நரானவர்]

சன்மம் பலபல என்கிற திருவாய்மொழியிலே பத்துப்பாட்டிலும் அடைவே *நானோர் குறைவிலனே * யானொரு முட்டிலனே * யானென் மனத்துப் பரிவிலனே* யானிறையேனுமிடரிலனே * ஒன்றும் துயரிலனே * யானோர் துன்பமிலனே* ஏதுமல்லலிலனே* யானோர் துக்கமிலனே* தளர்விலனே* யானென்றுங்கேடிலனே* என்று தாமே பேசும்படியாய் அம்ருதான முக்தர் பகவதநுபவம்பண்ணி ஆனந்திக்குமாபோலே அப்படிப்பட்ட ஆனந்தக் கடலிலே மூழ்கினாராயிற்று ஆழ்வார்.

செய்யதாமரைக் கண்ணன் அமரர் குலமுதலென்று அஞ்சாதபடி எளிவருமிணைவனுமென்றவை பரத்வமாம்படி அவனாகும் ஸௌலப்ய காஷ்டையைக் காட்டி,

---

[செய்யதாமரைக்கண்ணன்......அஞ்சாதபடி.]

*செய்யதாமரைக் கண்ணனாய் என்கிற திருவாய்மொழியும் *சொன்னால் விரோதம் என்கிற திருவாய்மொழியும் இப்பத்தில் உபதேச பரங்களாகையாலே அவற்றிலுள்ள ப்ரமேயம் அருளிச்செய்யப்படுகிறது. *செய்யதாமரைக்கண்ணனில் "நெஞ்சினால் நினைப்பான்யவன் அவனாகும் நீள்கடல் வண்ணனே" என்பது உயிர்நிலையான பாசுரம். "யாதொன்றை அவனுக்கு ரூபமாக நினைக்கின்றீர்கள், அதுதன்னையே அவன் திவ்யரூபமாகக்கொண்டருளும்" என்பது அதன்பொருள். ஆகவே அர்ச்சாவதார ஸௌலப்யோபதேசம் இத்திருவாய்மொழிக்குக் கருத்து என்றது. "அவனாகும் ஸௌலப்ய காஷ்டையைக்காட்டி" என்பதற்கு இரண்டு வகையான பொருள் விவக்ஷிதம்; அவனுக்கு அஸாதாரணஸ்வரூபமான ஸௌலப்யகாஷ்டை என்பது ஒரு பொருள். "அவனாகும்" என்கிற சந்தை வருகிற *தஞ்சமாகிய *என்னும் பாசுரத்தினாலே ஸௌலப்யகாஷ்டையைக்காட்டியென்பது மற்றொரு பொருள்.

[எளிவருமிணைவனுமென்றவை பரத்வமாம்படி-காட்டி.]

எம்பெருமானுடைய ஸௌலப்யம் ஏற்கனவே முதற்பத்தில் *பத்துடையடியவர்க்கு என்கிற திருவாய்மொழியில் *எளிவருமியல்வினன் என்பதனாலும், இரண்டாம்பத்தில் *அணைவதரவணைமேல்*என்கிற திருவாய்மொழியில் *இணைவனாமெப்பொருட்கும்*என்பதனாலும் அருளிச்செய்யப்பட்டிருந்தாலும், *செய்யதாமரைக்கண்ணனில் அருளிச்செய்யப்படுகிற அர்ச்சாவதார ஸௌலப்யமே சீரியதாதலாலும், அத்திருவாய்மொழிகளில் ப்ரதிபாதிக்கப்பட்ட அவதார ஸௌலப்யம் இந்த் அர்ச்சாவதார ஸௌலப்யத்தையபேக்ஷித்துப் பரத்வதுல்யமாதலாலும் "எளிவருமிணைவனுமென்றவை பரத்வமாம்படி" எனப்பட்டது. *செய்யதாமரைக்கண்ணாய் *என்று தொடங்கி *அஞ்சலிலமரர்குலமுதல் மூவர்தமுள்ளுமாதியை அஞ்சி நீருலகத்துள்ளீர்கள்*என்று "புண்டரீகாக்ஷத்வம் முதலிய பரத்வலக்ஷணங்களையுடையவன் ஞானச்சுருக்க மற்றவர்களான நித்யஸூரிகளின் திரளுக்கு நிர்வாஹகனன்றோ? ஸம்ஸாரிகளான நம்மால் அவனை ஆச்ரயிக்கப்போமோ? என்று அஞ்சவேண்டாவென்று சொல்லி அர்ச்சாவதார ஸௌலப்யத்தை உபதேசித்தபடியாலே "செய்யதாமரைக் கண்ணனமரர்குலமுதலென்றஞ்சாதபடி" எனப்பட்டது. ஸௌலப்யகாஷ்டையை என்றது அர்ச்சாவதாரத்தை என்றபடி. [இவ்வளவும் *செய்யதாமரைக்கண்ணனென்னும் பதிகத்தின் உபதேச விஷயம் தெரிவிக்கப்பட்டது; இனிமேல் *சொன்னால் விரோதம் *என்னும் பதிகத்தின் உபதேச விஷயம் தெரிவிக்கப்படுகிறது.]

ஆவணக்காப்பக சென்னை-600 00 159936

வழியைத் தருமவன் நிற்க இழியக் கருதுவதென்னுவது, வேண்டிற்றெல்லாம் தரும், தன்னுகவே கோள்ளும், கவிசோல்லவம்மினென்று முக்தைச்வர்யத்தை முன்னிட்டு ஞுவ்ருத்தியை மாற்றி ஸ்வவ்ருத்தியிலே மூட்டுகிறார் மூன்றும்பத்தில்.

வழியைத்தருமவன்நிற்க இழியக் கருதுவது என்னுவது?=பரமவிலக்ஷணனை மஹோபகாரகனை எம்பெருமானிருக்க அவனைவிட்டு அற்பமனிசரைக்கவிபாடி என்னபலன்? எம்பெருமான் விஷயத்தில் எத்தனை யூழிகாலம் கவிபாடினுலும் ஏற்றிருக்கும்; பாடுவதற்கும் மெய்பான திருக்குணங்கள் எல்லைகடந்தவையுண்டு; பாடுகிறவர்களுக்கும் ஸகலபுருஷார்த்த ஸித்தியுண்டு; பாட்டுக்கும் மிக்கசிறப்புண்டு; இப்படியிருக்க, தகாதவிஷயங்களைத் தேடித்திரிந்து மானிடம்பாடி அதோகதியை அடையப்பார்க்கிறீர்களே! இது என்கொல்? என்றும்;

வேண்டிற்றெல்லாம் தரும்=அற்பபலன்களையும் குறையறக் கொடுக்கமாட்டாத பிறர்களைப்போலன்றிக்கே ஸர்வாபேக்ஷிதங்களையும் பூர்த்தியாகக் கொடுத்தருள்வனெம்பெருமான்.

தன்னுகவே கோள்ளும்=*தம்மையே நாளும் வணங்கித்தொழுவார்க்குத் தம்மையேயொக்க அருள்செய்வர் *என்கிற கணக்கிலே தன்னோடு பரமஸாம்யாபத்தியையும் பண்ணிக்கொடுக்குமெம்பெருமான். [கவிசோல்லவம்மின் என்று] இதற்காக நீங்கள் செய்யவேண்டுவது ஒன்றுமில்லை; வீணுக நரஸ்துதிபண்ணிப் புழுதிபடைக்கின்ற நாவைக்கொண்டு பகவத்விஷயத்திலே கவிசொல்லுமத்தனையே வேண்டுவது; அதற்காக வாருங்கோள் என்று சொல்லி

[முக்தைச்வர்யத்தை முன்னிட்டு.] ஒன்றைவிட்டு மற்றொன்றைப் பற்றும்படி விதிக்குமவர்கள் "இதைப்பற்றினுல் இன்ன பெருமையுண்டாகும்" என்று ருசி காட்டுவர்களே; அப்படியே ஆழ்வாரும் நித்யாநந்தஸ்வரூபமான ருசி காட்டினராயிற்று. *வழியைத்தரும் நங்கள் வானவரீசன் நிற்க *தன்னுகவே கொண்டு சன்மஞ்செய்யாமையுங் கொள்ளுமே * இத்யாதி பாசுரங்கள் காண்க.

[ச்வவ்ருத்தியை மாற்றி ஸ்வவ்ருத்தியிலே மூட்டுகிறார்.] ச்வவ்ருத்தியாவது நாய் வேலை. "ஸேவா ச்வவ்ருத்திராக்யாதா தஸ்மாத் தாம் பரிவர்ஜயேத்" ஸேவா ச்வவ்ருத்திராக்யாதா தஸ்மாத் தாம் பரிவர்ஜயேத்.'' என்று மநுமஹர்ஷியால் கூறப்பட்டபடியே நிஹீநரான ஸம்ஸாரிகளை வழிபடுவது நாய் வேலையாகையாலே அப்படிப்பட்ட அப்ராப்த விஷய ஸேவையைமாற்றி ப்ராப்தமான பகவத்விஷயத்திலே வாசிகமாக அடிமைசெய்கையாகிற ஸ்வரூபாநுரூப வ்ருத்தியிலே ருசியையுண்டாக்குகிறார் மூன்றும்பத்தில்—என்றதாயிற்று.